# தேவனுடைய ஊழியங்களை அறிந்துகொள்ளுதல்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 9

## பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஐந்துவகை ஊழியத்திற்கான அழைப்பு இல்லாவிட்டாலும், மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஒரு ஊழியம் இருக்கிறது (எபே. 4:11–12). விசுவாசிகளை அவர்களுடைய ஊழியத்திற்கு தயார் செய்வதே ஐந்துவகை ஊழியத்தின் நோக்கமாகும். ஊழியத்தின் சாராம்சம் எஜமானத்துவம் அல்ல, சேவையே. எல்லாரிலும் பெரியவனாயிருக்க விரும்புகிறவன், எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்க கற்றுக்கொள்ள வேண்டும் (மத். 23:11).

இந்தப் புத்தகத்தில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகருடைய ஊழியம் என்ன என்பதைக் குறித்த சுருக்கமான வரையறைகளைக் கொடுக்க நாடுகிறோம். ஒவ்வொரு ஊழியமும் என்ன என்பதை விளங்கிக்கொள்ளாமல், ஒருவர் அவைகளுக்குள் நுழைய முடியாது.

விசுவாசிகளின் ஒன்பது வகையான ஊழியங்களும், இன்னும் அதிகமாக இந்தப் புத்தகத்தில் விவாதிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு ஊழியங்களின் விவரிப்பு மற்றும் வரையறைகள் மூலமாக, தேவன் ஒவ்வொருவரையும் அழைத்துள்ள அவர்களுக்குரிய ஊழியங்களினால், சரீரமாகிய சபை உதவி பெறுவதே எங்களது ஜெபமாகும்.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 1

# விசுவாசிகளின் ஒன்பது ஊழியங்கள்

ஐந்துவகை ஊழியங்கள், ஊழியத்தின் வேலைக்காக பரிசுத்தவான்களை தகுதிப்படுத்தும் என்று வேதம் சொல்லுகிறது (எபே. 4:12). எல்லா விசுவாசிகளும் கர்த்தரிடத்திலிருந்து விசேஷ ஊழியத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் முழுநேர ஊழியத்திற்காக அழைக்கப்படாமலிருக்கலாம், ஆனால் ஒவ்வொருவரும் ஊழியத்தின் சில அம்சங்களுக்காக அழைக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வகை ஊழியங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் விசேஷ வேலைகளைப் பெற்றிருக்கின்றன. ஒரு கூட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் செயல்படுவதை விட அவைகள் வித்தியாசமானவை. பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் செயல்படுதல், அதேபோல் தேவன் அவர்களை அழைத்த குறிப்பிட்ட ஊழியத்தில் செயலாற்றுதல் ஆகிய இரண்டையும், விசுவாசிகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

விசுவாசிகளின் ஒன்பதுவகை ஊழியங்கள், சபையில் பதவிகளையோ அல்லது அலுவல்களையோ குறிக்கின்றன. அவைகள் ஐந்துவகை ஊழியங்களிலிருந்து வேறுபட்டதும் வித்தியாசமானவைகளுமாகும். இந்த ஒன்பது ஊழியங்களுக்கான அழைப்பு என்பது, முழு நேர ஊழியத்திற்கான தேவ அழைப்பைக் குறிக்காது. எனினும், இந்த ஒன்பது ஊழியங்களும் ஐந்துவகை ஊழியங்களுக்கு சேவை செய்யும்போது, அவர்களுடைய ஊழியங்களின் மீது தேவை ஏற்பட்டு, அவர்கள் தங்கள் முழு நேரத்தையும், ஊழியத்தின் வேலைக்கு அர்ப்பணம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படலாம்.

### *தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியம்*

தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியம், ஒரு தீர்க்கதரிசியின் ஊழியமல்ல. தீர்க்கதரிசியின் ஊழியம் ஐந்துவகை ஊழியங்களில் ஒரு விசேஷித்த தேவ அழைப்பாகும். ஆனால், தீர்க்க தரிசனம் சொல்லும் ஊழியமோ, சபையில் தீர்க்கதரிசன வரத்தின் ஒரு விசேஷித்த வேலையாகும். சாதாரண தீர்க்கதரிசன வரத்தைக் காட்டிலும் தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியமானது, பத்தாயிரம் மடங்கு அதிக வல்லமையான அபிஷேகத்தைக் கொண்டதாய் இருக்கலாம். சாதாரண தீர்க்கதரிசன வரத்தைக் காட்டிலும் தீர்க்கதரிசியின் ஊழியம் லட்சக்கணக்கான மடங்கு வல்லமையுள்ளதாக இருக்க முடியும்.

ஒரு கூட்டத்தில், பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படி, தீர்க்கதரிசன வரம் வெளிப் படுதலில் இருக்கும் (1 கொரி. 12:10, 11). தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியம் என்பது, தீர்க்கதரிசன வரம் பெற்ற ஒரு விசுவாசி, தன்னுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் அதை ஒரு விசேஷ மற்றும் ஒழுங்கான ஒரு அம்சமாக கொண்டிருத்தலைக் குறிக்கிறது. தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தையுடையவர்கள் தங்களுடைய விசுவாச விகிதத்திற்கேற்ற படி தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் (ரோம. 12:6).

தங்கள் விசுவாச விகிதத்திற்கேற்றபடி தீர்க்கதரிசனம் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் சொல்லும் காரியம் எதைக் காட்டுகிறதென்றால், பரிசுத்த ஆவியானவர் சித்தப்படி செயல்படும், வெறும் தீர்க்கதரிசனமாக இல்லாமல் இது அபிவிருத்தி செய்யப்படக்கூடிய ஒரு ஊழியமாகும். பவுல் இந்த ஊழியத்தைக் குறித்து கொரிந்தியரிடம் பேசும்போது, தீர்க்கதரிசனம் சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள் என்று புத்திமதி சொல்கிறார் (1 கொரி. 14:24, 31).

இது சபையின் மிக பிரசித்திபெற்ற ஊழியமாயிருக்க வேண்டும், மற்றும் முழு கொரிந்திய சபையும் இதற்குள் வரும்படி பவுல் உற்சாகப்படுத்துகிறார் (1 கொரி. 14:5). இயேசுகிறிஸ்துவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது (வெளி. 19:10). கடைசி நாட்களில் ஊழியக்காரர்மேலும், ஊழியக்காரிகள் மேலும் பரிசுத்த ஆவியானவர்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

ஊற்றப்படுவார், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் (அப். 2:18). குமாரரும், குமாரத்திகளும் கூட தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் (அப். 2:17).

*மூப்பரின் ஊழியம்*

ஊழியஞ்செய்யும் வரத்தையுடையவர்கள், அதை தங்கள் ஊழியத்தில் உபயோகிக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார் (ரோம. 12:7). 'ஊழியம்' என்ற வார்த்தை கிரேக்கப் பதமான 'டயகோனியா' 'diakonia' என்ற வார்த்தையிலிருந்து வருகிறது, அது மூப்பருடைய ஊழியத்தைக் குறிக்கிறது. இது அப்போஸ்தலர்கள் ஏழுபேரை பந்தி விசாரணை செய்யும்படி நியமித்த அதே ஊழியமாகும் (அப். 6:1–3). அந்த வார்த்தையின் முழு அர்த்தப்படி, மூப்பரின் ஊழியமானது, ஒரு பணியாள் அல்லது வேலையாளின் ஊழியமாகும். இது முழுவதும் சேவை சார்ந்த ஊழியமாகும். சில நேரங்களில் மிகவும் இழிவான வேலைகளையும் செய்யுமளவிற்கு பின்னணியில் வேலை செய்வதாகும். ஆனாலும், பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பது என்ற அவசியம் இன்னும் முக்கியமானதாகும் (அப். 6:3).

இந்த ஊழியம் உதவிகளின் ஊழியம் என்றும் அழைக்கப்படுகிறது (1 கொரி. 12:28). மற்ற ஊழியங்களுக்கு இது ஒரு உதவியாகும். மூப்பரின் ஊழியம் இல்லாமல், மற்ற ஊழியங்கள் சுமூகமாக செயல்பட முடியாது. ஒரு மூப்பருடைய வேலை, சபையில் வழக்கமாகச் செய்யும் தினசரி வேலைகளையும், ஒவ்வொரு நாளும் சரீரப்பிரகாரமான வேலைகளைச் செய்யவதுமாகும். பின்னணியில் செய்யப்படும் எல்லா வேலைகளையும் செய்பவர்கள் தேவனுடைய வரத்தைப் பெற்ற மூப்பர்களே.

ஐந்துவகை ஊழியங்களின் வேலையாளாகவும் மூப்பர் செயல்படுகிறார். மேசேக்கு மூப்பரின் ஊழியத்தில், யோசுவா செயல்பட்டார் (யாத். 24:13; யோசு. 1:1). எலியாவிற்கு மூப்பரை போன்று எலிசா செயல்பட்டார் (1 இரா. 19:21; 2 இரா. 3:11). மூப்பரின் நிலையில் தன்னுடைய தேவைகளில் செயல்பட்டு உதவி செய்யும் மக்களை பவுல் உடையவராய் இருந்தார் (அப். 19:22). நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஊழியர்களின் மூப்பர்களாகவே, அநேக தேவ மனிதர்கள் தங்கள் ஊழியத்தை ஆரம்பித்தனர். மூப்பர்களைப் போன்று செயல்பட்டு, அவருடைய தேவைகளில் உதவி செய்த அநேகம் ஸ்திரிகள் இயேசுவுடனே இருந்தார்கள் (லூக். 8:3). தேவ மனிதர்களுக்கு ஊழியம் செய்வதற்கு, விசேஷித்த கிருபை வேண்டும்; அவர்களில் சிலருக்கு வினோத சுபாவங்கள் இருப்பதால், இந்த விசேஷித்த கிருபை உள்ளவர்களால் மாத்திரமே, அவர்களுக்கு ஊழியம் செய்ய முடியும்.

மூப்பர்கள்தான் கடினமான வேலை செய்து அதைநிறைவேற்றுபவர்கள். முன்னணியில் இருந்து ஆவிக்குரிய இலக்குகளை, சரீர வேலைகளைச் செய்து நிஜமாக்கக் கூடியவர்கள். சுவிசேஷகர் வந்து அற்புதக் கூட்டங்களை நடத்துகிறார். ஆனால், மூப்பர்கள்தான் கூட்டங்களின் அன்றாடக நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்துவர்கள். 'பகலின் வெப்பத்தை' தாங்கிக் கொள்பவர்கள் அவர்கள்தான். புகார்களையும், முறுமுறுப்புகளையும் வழக்கமாய் பெற்றுக்கொள்பவர்கள் மூப்பர்களே. இந்தக் காரணத்திற்காகவே மூப்பர்கள் நல்ல நாவடக்கம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் (1 தீமோ. 3:8).

ஒரு ஊழியத்தில் ஸ்திரத்தன்மையை உண்டாக்கும் பாத்திரமாகவும் மூப்பர்கள் இருக்கிறார்கள். சில நேரங்களில் தேவமனிதர்கள் நல்ல தொழில் நிர்வாகிகளாக இருக்க மாட்டார்கள். அவர்கள் இந்த வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை சமாளிப்பதில் விவேகமற்றவர் களாய் இருப்பர். அவர்கள் தேவன்மேல் வைத்திருக்கும் பேரார்வத்தினால், சில நேரங்களில் தங்களின் விசுவாச நிலைக்கு அப்பாற்பட்டு, காலத்துக்கு முன்பாக காரியங்களை செய்து விடுவார்கள். அவர்கள் தேவன் மீது வைத்திருக்கும் விசுவாசம், நல்ல தெளிவான தொழிற்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

கொள்கைகளால் பக்குவப்படுத்தப்பட்டிருக்காது. விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலே காத்துக்கொள்ள உதவுகிறவர்களும் இந்த மூப்பர்களே (1 தீமோ. 3:9). ஒரு ஊழியம் தற்போதுள்ள விசுவாச அளவை மீறி விரிவாகாதபடிக்கு, அவர்கள் உதவி செய்வார்கள்; அந்த ஊழியத்தின் விசுவாச அளவை தெரிந்துகொண்டு, மனசாட்சியின் வழிகாட்டுதல்படி காத்துக்கொள்வார்கள் (1 தீமோ. 1:19).

ஆயினும் மூப்பரானவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சிக்காத உத்தமமான ஆண் (அ) பெண்ணாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:8). தொழிலையே விரும்பும் கிறிஸ்தவர்கள், சில நேரங்களில் சபையில் உரிமை எடுத்துக்கொண்டு, சபையிலிருந்து பணம் சம்பாதித்து உள்ளார்கள். இன்னுமதிகமாக, விசுவாச அடி எடுத்துவைக்கும்படியாக, அவிசுவாசம் அவர்கள் விவேகத்திலிருந்து வித்தியாசப்படுத்தப்பட வேண்டும். உண்மையுள்ள திறமையுள்ள மூப்பர்களைப் பெற்ற ஊழியங்கள் பாக்கியமுள்ளவைகள்.

*போதிக்கும் ஊழியம்*

போதிக்கும் ஊழியமானது, ஐந்துவகை ஊழியத்தில் உள்ள போதகரின் உத்தியோகத்தை விட வித்தியாசமானது. ஐந்துவகை ஊழியத்திலுள்ள போதகர், கிறிஸ்துவின் முழுசரீரத்திற்கும் முழு நேர ஊழியத்தில் போதிக்க அழைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் போதிக்கும் ஊழியமானது, குறிப்பாக ஸ்தல சபை விசுவாசிகளுக்கானதாகும். தான் கேட்டவைகளை, மற்றவர்களுக்கும் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்க, பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகிறார் (2 தீமோ. 2:2). தேவன் தகுதிப்படுத்தின சிலர் நிறைவேற்றும் போதிக்கும் ஊழியத்தை பவுல் குறிப்பிடுகிறார் (ரோம. 12:7).

கிறிஸ்துவின் மூல உபதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டவர்கள், மற்றவர்களுக்கு போதிக்கும் ஊழியத்திற்கு கடந்து வருமளவிற்கு தேர்ச்சி பெற்றவர்களாயிருக்க வேண்டும் (எபி. 5:12). போதிக்கும் ஒரு விசுவாசியின் ஊழியத்தில், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் செயல் பட்டனர். முழு நேர ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருந்த புதிய விசுவாசியான அப்பொல்லோ என்பவன் எபேசு பட்டணத்துக்கு வந்தபோது, அவர்கள் அவனை சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப். 18;26). அவர்கள் கிறிஸ்துவின் சபையிலே தலைவர்களாக இருந்தனர் மற்றும் அவர்களின் சொந்த வீட்டிலே ஒரு சபையை வைத்திருந்தார்கள் (ரோம. 16:3–5; 1 கொரி. 16:19).

ஸ்தல சபையில் இது ஒரு முக்கியமான ஊழியம் ஆகும். ஏனெனில், போதனைதான் ஸ்தல விசுவாசிகளை அவர்களுடைய ஊழியத்திற்குள் கட்டி எழுப்புகிறது. எந்த போதனையின் கீழ் வளர்க்கப்படுகின்றார்களோ அதைப்பொறுத்தே எந்த ஒரு கிறிஸ்தவனின் முதிர்ச்சியும், தரமும் அமைகிறது. ஐந்துவகை ஊழியத்திலுள்ள போதகரின் வேலை, ஐந்துவகை ஊழியத்திலுள்ள சுவிசேஷகர் மற்றும் மேய்ப்பரின் வேலைகளுக்கு மேலானது (1 கொரி. 12:28).

*புத்திசொல்லும் ஊழியம்*

புத்திசொல்லும் ஊழியம் மூன்று வேலையாக செயல்படுகிறது: ஆத்தும ஆதாயம் செய்பவரின் வேலை, சங்கீதக்காரனின் வேலை, மற்றும் பரிந்துபேசி ஜெபிக்கும் வேலை. பரிந்து பேசும் ஜெப ஊழியத்தில் நுழைபவர்கள் எல்லாராலும் இந்த மூன்று வேலைகளையும் செய்ய முடியாது. வழக்கமாக இந்த ஊழியத்தைச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவரின் வரம் பெற்றவர்கள், ஒரு வேலையில் பிரத்தியேகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பொதுவாக இந்த ஊழியம் புத்திசொல்லும் ஊழியம் என்றழைக்கப்படும் (ரோம. 12:8).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஒருவருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் செயல்படுகிறதை தவிர, ஆத்தும ஆதாயஞ் செய்யும் ஊழியமானது, ஒருவகையில் ஐந்துவகை ஊழியத்தில் உள்ள சுவிசேஷகருடைய ஊழியத்தைப் போன்றது. யோசே தன் ஊழியத்தை புத்திசொல்லும் ஊழியமாக ஆரம்பித்தார். அவர் அதில் அதிக திறமை வாய்ந்தவராக இருந்ததால், அப்போஸ்தலர்களால் அவருடைய பெயர், ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபாஸாக மாற்றப்பட்டது (அப். 4:36).

வேதத்தில், 'அமைதியான அவர்கள்'ன் ஊழியத்தைப் பார்க்கிறோம். இயேசு அவர்களை சுகமாக்கும்படி அவர்களை கொண்டவந்த, பெயர் தெரியாத யாரென்று அறியப்படாதவர்கள் தான் இவர்கள். இவர்கள் சுகவீனமாகவர்கள் அல்ல, ஆனால் கூட்டங்களுக்கு வரும்படி மற்றவர்களை உற்சாகப்படுத்தினர் (மத். 8:16; 9:2; 15:30). இவர்கள்தான் புத்தி சொல்லும் ஊழியத்தைப் பெற்றவர்கள். அவர்கள் மற்றவர்களை கர்த்தரிடமோ அல்லது அவருடைய ஊழியரிடமோ அழைத்துக்கொண்டு வந்தனர். அப்போஸ்தவர்களின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள பவுலுக்கு உதவினவர் பர்னபாஸ். மற்றும் பவுலின் ஊழிய ஆரம்பங்களில் அவரோடிருந்தார் (அப். 9:26, 27; 11:25, 26).

புத்தி சொல்லும் ஊழியத்தின் இரண்டாவது வேலை, சங்கீதக்கார ஊழியத்தைப் போன்றது. மற்றவர்கள் தேவனை ஆராதிக்கும்படி புத்திசொல்லி உதவி செய்கிறவர்கள்தான் சங்கீதக்காரர்கள். தன்னுடைய புத்தி சொல்லும் ஊழியத்திற்கு உதவியாக, சங்கீதக்காரர் இசைக்கருவிகளை உபயோகப்படுத்திக்கொள்வார். சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம்பண்ண பவுல் அறிவுறுத்துகிறார் (எபே. 5:18, 19). தீர்க்கதரிசியின் அபிஷேகத்தில் எலிசா செயல்பட, இந்த ஊழியம்தான் உதவி செய்தது (2 இராஜா. 3:15).

ஊழியத்தின் இந்தப் பகுதியில் செயல்படும்படியாக அழைக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாகவும், தேவ வார்த்தையால் பரிபூரணமாக நிறைந்தவர் களாகவும் இருக்க வேண்டும் (எபே. 5:18, 19; கொலோ. 3:16). இசை தாலந்தகளால் மாத்திரம் இசை ஊழியங்களை தாங்குவதில்லை. ஆனால், இசைக் கலைஞர்களின் வாழ்வில் உள்ள தேவ வார்த்தையும், பரிசுத்த ஆவியானவருமே அவர்களை நிலைநிறுத்துகின்றனர். விசுவாசிகளின் கூடுகையில், இசையோடு கூடிய புத்தி சொல்லும் ஊழியமே மக்களை ஆராதனைக்குள் நடத்தி, ஐந்து வகையான ஊழியங்களைப் பெற்றுக்கொள்ள ஆயத்தப்படுத்துகிறது.

புத்தி சொல்லும் ஊழியத்தின் மூன்றாவது செயல்பாடு, பரிந்து பேசும் ஜெபமாகும். ஜெப ஊழியம், ஆவிக்குரிய மண்டலத்தில் புத்திசொல்லும் ஊழியமாகும். யாருக்காக ஜெபிக்கப் படுகிறதோ, அவர்களுக்கு உதவியையும் உற்சாகத்தையும் அது கொண்டு வருகிறது. அதுவே ஒரு விசேஷித்த கடின வேலையாகும். எப்பாப்பிராவும், கொலோசெயருக்காக, எப்போதும் ஜெபங்களில் போராடுகிறான் (கொலோ. 4: 12). ரோமாபுரியிலிருக்கும் சபையும் அவரோடு கூட ஜெப ஊழியங்களில் போராட வேண்டுமென்று பவுல் வேண்டிக்கொள்கிறார் (ரோம. 15:32).

அநேக தடவைகளில் மற்ற எல்லாம் தோல்வியுறும்போது, ஜெபத்தின் ஆவிக்குரிய கொள்கைகளைப் பயன்படுத்தி, நாம் ஒரு நபருக்கு உதவிசெய்யவும் உற்சாகப்படுத்தவும் முடியும். பரிந்து பேசி ஜெபிப்பவர்கள், ஆத்தும ஆதாயம் செய்பவர்களோடு சேர்ந்து வேலை செய்வது, தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு பெரிய ஆத்தும அறுவடையைக் கொண்டுவரும். பேதுரு விழுந்து போவதை இயேசு முன்பதாகவே கண்டு, அவன் திரும்ப பழைய சீர் நிலைக்கு வர அவனுக்காக வேண்டிக்கொண்டதாக, அவனைத் தேற்றுகிறார் (லூக். 22:32). சபையின் தொன்னூறு சதவீதப் பிரச்சனைகளை ஜெபத்தின் மூலம் தீர்க்க முடியும். ஜெபமற்ற சபையே, பிரச்சனைகளைத் தீர்க்க மனித ஞானத்தை நாடுகிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

### *கொடுத்தலின் ஊழியம்*

தொழில் முனைவராக கிறிஸ்தவர் ஒருவர் இருப்பது, தேவனுடைய விசேஷ ஈவு. இயேசு கிறிஸ்துவின் சபையைத் தாங்க, பொருளாதார செழிப்பை அறுவடை செய்யும் தொழிலதிபர் களாக செயல்படும்படி, தேவன் சபையில் சிலரை அழைத்திருக்கிறார். வேதம் இதை கொடுத்தலின் ஊழியம் என்றழைக்கிறது (ரோம. 12:8). இந்த வரத்தையுடையவர்கள் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி, செழிப்பின் கொள்கைகளைக் கற்றுக்கொண்டு அவைகளில் நிபுணராக வேண்டும்.

உலகத்தின் செல்வத்தை விசுவாசிகளின் கைகளுக்கு கொண்டுவர ஞானத்தின் ஆவியானவர், இந்தவரத்தில் வல்லமையாய் செயல்பட்டு, யோசனைகளையும் முறைகளையும் கண்டபிடிப்புகளையும் கொடுக்கிறார். யோசேப்பின் ஞானமே, பார்வோனின் அரசாங்கத்திற்குள் ஒரு இடத்தை அவனுக்கு கொண்டுவந்தது. யோசேப்பு பார்வோனின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்லி அதோடு நின்றிருந்திருக்க முடியும். ஆனால், அவன் வாழ்க்கையிலிருந்த ஞானத்தின் வரமே, பார்வோனுக்கு செழிப்பின் முதல் ஏழு வருடங்களில் தானியத்தை பாதுகாக்கும் ஒரு திட்டத்தை முன்மொழிய உதவிசெய்தது (ஆதி. 41:25–36). யோசேப்பின் அறிவுரையே பார்வோனையும் அவன் ஊழியக்காரரையும் கவர்ந்தது (ஆதி. 41:37).

மக்கள் சந்திப்பது ஒருபோதும் பணப்பிரச்சனை அல்ல. அது ஒரு யோசனை பிரச்சனையே. எங்கு எப்படி பணத்தை பெற்றுக்கொள்வது என்ற சரியான யோசனை மக்களுக்கு இருந்தால், பணப்பிரச்சனையே இருக்காது. பரிசுத்த ஆவியானவரின் ஞானத்தின் மூலமாக, மிக நல்ல யோசனைகள் எப்போதும் தேவனிடமிருந்து வருகின்றன. இந்த உலகம் இதுவரை பார்த்திராத, நல்ல யோசனைகளையும் திட்டங்களையும் கண்டுபிடிப்புகளையும், இந்தக் கொடுத்தலின் ஊழியம் கொண்டவர முடியும். பாவிகளின் ஆஸ்தி நீதிமான்களின் கைக்கு வருவது, தேவனால் முன் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (நீதி. 13:22).

அவருடைய கைக்கு தேவன் கொண்டுவரும் அத்தனை செல்வத்தையும், தொழில் முனையும் கிறிஸ்தவர் தேவ ஊழியத்தின் வேலைக்காக கொண்டு வரவேண்டும். இப்படிப் பட்ட மக்கள், தங்கள் வாழ்வின் எஞ்சிய பகுதியை கட்டுப்படுத்த முடியாத சுகபோகத்தில் கழிப்பது, இந்த வரத்தின் நோக்கமல்ல. தேவன் அவர்களை பெலப்படுத்தி கொண்டுவரும் படி செய்த பணங்கள், கிறிஸ்துவின் சரீரம் பூரணப்படுத்தப்படவும், ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசேஷம் கொண்டு செல்லப்படவும் செலவழிக்கப்பட வேண்டும்.

### *ஆளுகையின் ஊழியம்*

இந்த ஊழியம், வழிநடத்தும் ஊழியம் என்றும் அழைக்கப்படுகிறது (ரோம. 12:8). கொரிந்தியருக்கு எழுதின புத்தகத்திலே இந்த ஊழியம், ஆளுகையின் ஊழியம் என்று அழைக்கப்படுகிறது (1 கொரி. 12:28). 'குபேர்' 'kuber' என்னும் கிரேக்க வார்த்தையி லிருந்து இது வருகிறது. இதின் பொருள் என்னவெனில் 'செலுத்து', 'வழிகாட்டு' அல்லது 'நடத்து'. ஒவ்வொரு முறையும் மனிதர்கள் ஒன்று கூடும்போது, அவர்களுக்கு சரியான நிர்வாகம் தேவையாயிருக்கிறது. இந்த உலகம் இதை உணர்ந்து, நன்கு நிர்வகிப்பவர்களுக்கு உயர்வான மதிப்பைக் கொடுக்கிறது. பாபேல் கோபுரத்தில் செய்தித் தொடர்பு கொள்வது தடைபட்ட போது, நிர்வாகம் செயலற்றுப்போய் கட்டும் வேலை அசாத்தியமாயிற்று. பாபேல் கோபுரத்தில் செய்யப்பட்ட வேலை கைவிடப்பட்டது (ஆதி. 11:8, 9).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

ஆயினும் ஆளுகையின் ஊழியம், இயற்கையான ஞானத்தையோ திறமைகளையோ சார்ந்ததல்ல. அது பரிசுத்த ஆவியானவரால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு வரம். அது முற்றிலும் வித்தியாசமான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டது. சரியான மக்களை, செயல்படும் சரியான இடத்தில் வைக்க, இது பரிசுத்த ஆவியானவர் தரும் ஆற்றலாகும். அந்தியோகியா சபையில் உதவி செய்யும்படி பவுலைத் தேடி பர்னபா தர்சுவுக்கு சென்றபோது, இந்தவரத்தை செயல்படுத்தினார் (அப். 11:24, 25).

யோசேப்பு எகிப்திலே இந்த வரத்தை திறமையாக செயல்படுத்தினதினால், அவன் சென்ற ஒவ்வொரு இடத்திலும் அவன் தலைமைத்துவ பதவியில் வைக்கப்பட்டான். யோசேப்பு போத்திபாரின் வீட்டு விசாரணைக்காரனாக நியமிக்கப்பட்டான் (ஆதி. 39:4). சிறையில் இருந்தபோது, சிறைச்சாலையில் வைக்கப்பட்டவர்களின் மீது விசாரணைக்காரனாயிருந்தான். அவர்கள் செய்வதெல்லாவற்றையும், யோசேப்பு செய்வித்தான் (ஆதி. 39:22). கடைசியாக எகிப்து தேசம் முழுமைக்கும் முதன்மை அதிகாரியாக உயர்த்தப்பட்டான் (ஆதி. 41:40).

தலைமைத்துவத்தில் இரண்டு முக்கியமான திறவுகோல்கள் உள்ளன. உண்மையான தலைமைத்துவம், பிரமாணத்தின் மூலம் மற்றும் முன் மாதிரியாய் இருப்பதின் மூலமும் உள்ள தலைமைத்துவமாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தில் இயேசுவின் தலைமைத்துவமும், பிரமாணத்தினாலும் மற்றும் முன்மாதிரியினாலும் இருந்தது. அவர், தம்முடைய போதனை களை நமக்குக் கொடுத்தார். அவர் தம்முடைய முன் மாதிரியையும் நமக்குக் கொடுத்தார் (யோவா. 13:15). பவுலின் தலைமைத்துவமும் பிரமாணத்தின் மூலமும் மற்றும் முன்மாதிரியின் மூலமும் இருந்தது (அப். 20:27, 35). வார்த்தையிலும், நடக்கையிலும் முன் மாதிரியாயிருந்து சபையை நடத்தம்படி தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகிறார் (1 தீமோ. 4:12).

*இரக்கத்தின் ஊழியம்*

இந்த ஊழியம் ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும், மற்றும் ஆதரவற்றவர்களுக்கு மானது. தேவையிலுள்ளவர்களுக்கு இது தேவனுடைய அன்பை நடைமுறை வழியில் கொண்டு வருவது ஆகும். இந்த ஊழியம் தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும், செயல்முறைப்படுத்திக் காண்பிக்கிறது. எனவே, இது இரக்கத்தை காண்பிக்கும் ஊழியமாக அழைக்கப்படுகிறது (ரோம. 12:8). இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளப் பாத்திரராக, மூன்று வகை மக்களை தேவன் பிரத்தியேகப்படுத்தி குறிப்பிடுகிறார். அவர்கள்தான் பரதேசிகள், தகப்பனற்ற பிள்ளைகள் மற்றும் விதவைகள் ஆவார்கள் (உபா. 24:19–21).

ஆதித் திருச்சபை ஏழைகளுக்கும், விதவைகளுக்குமான ஊழியத்தை உடையதாய் இருந்தது. விதவைகளை விசாரிக்கும்படி ஏழு மூப்பர்கள் விசேஷமாக தேர்ந்தெடுக்கப் பட்டனர் (அப். 6:1–6). பவுலுக்கு அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக வலது கை கொடுத்த போது, தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்கு புத்தி சொன்னார்கள் (கலா. 2:9). உலகப் பிரகாரமான பொருட்களையும் ஆசீர்வாதத்தையும் பகிர்ந்துகொள்வது, பரிசுத்த ஆவியானவர் கொண்டுவரும் அன்பின் எழுப்புதலினுடைய ஒரு பகுதியாக எப்போதுமே இருந்திருக்கிறது (அப். 4:34–37; 11:28–30). ஒரு கிறிஸ்தவனிடம் உள்ள அபிரிமிதம், வேறொருவனுடைய தேவைக்க உதவுவதற்கே இருக்கிறது (அப். 4:34–37; 11:28–30). ஒரு கிறிஸ்தவனிடம் உள்ள அபரிமிதம், வேறொருவனுடைய தேவைக்கு உதவுவதற்கே (2 கொரி. 8:14, 15).

இந்த ஊழியம் ஆரோக்கியமான வேதாகமக் கொள்கைகளால் வழிநடத்தப்படுவது அவசியமாகிறது. இது ஏழைகளுக்கு பரிதாபம் காண்பிப்பதும், சரீரப்பிரகாரமாக உதவி செய்வதும் மட்டும் அல்ல. அன்பில்லாமல் கொடுப்பது சாத்தியமானதே (1 கொரி. 13:3). இந்த ஊழியத்திற்கு வழிகாட்டக் கூடிய இரண்டு முக்கிய கொள்கைகள் இருக்கின்றன. உதவி செய்கிறவர், தான் உதவி செய்யக் கூடிய திறனின் அடிப்படையில் உதவி செய்ய வேண்டும் (2 கொரி. 8:12). இரண்டாவதாக, சரீரப்பிரகாரமாக செய்யப்படும் உதவி, அதைப் பெற்றுக்கொள்பவரை தேவனோடு நெருக்கமான உறவிற்குள் நடத்த வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளும் பின்பற்றப்படாவிட்டால், அது இரக்கத்தின் ஊழியம் அல்ல. அது வெறும் பரிதாபமாகவே இருக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

தங்கள் ஆர்வமிகுதியினால் மற்றவர்களுக்கு உதவி செய்யும் அநேக மக்கள், தங்கள் சொந்த வாழ்க்கையையும் குடும்பத்தையும் அழித்துக்கொள்கிறார்கள். மற்றவர்களுக்கு பண உத்திரவாதம் கொடுப்பதினால், சிலர் பெரிய கடனிலே சிக்கிக் கொள்கிறார்கள். மற்றவர்கள், திரும்ப செலுத்தும் சாத்தியம் இல்லாதவர்களுக்கு, தாங்கள் கடினமாய் உழைத்த பணத்தை கடனாகக் கொடுகிறார்கள். நாம் கையாளும் திறனுக்கு மேலாக, உதவி தேவைப்படும் அதிகமான மக்கள் எப்போதுமே இருப்பார்கள். உதவி செய்யும் நம்முடைய ஆற்றலின் அடிப்படையிலேயே உதவி செய்ய வேண்டும். உதவி செய்கிறவர், தான் அதிகபாரமடைய தன்னை அனுமதித்துக் கொள்ளக் கூடாது (2 கொரி. 8:12, 13). எனினும் உதவியைப் பெற்றுக்கொள்ள பாத்திரமானவர்கள், முதலில் இரண்டாவது கொள்கையை நிறைவேற்ற வேண்டும்.

பணம் கேட்கும் ஒவ்வொருவரும் உதவியைப் பெற்றுக்கொள்ள பாத்திரமானவர்கள் அல்ல. மற்ற கிறிஸ்தவர்களின் பரிதாபத்தில் ஒட்டிக்கொண்டு 'அட்டைகள்' போல் வாழ்வதையே, தொழிலாகக் கொண்டவர்கள் கிறிஸ்தவத்தில் உண்டு. ஒரு நபர் வேலை செய்ய மனமில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் கூடாது (2 தெச. 3:10). தன் குடும்பத்தை தாங்கும்படியாய் வேலை செய்யாத ஒரு நபர், அஞ்ஞானியைவிட மோசமானவர் (1 தீமோ. 5:8). மற்றொருவரிடத்திலுள்ள அப்படிப்பட்ட குணத்தை நாம் ஆதரித்தோமானால், அவர்கள் அதே நிலையிலிருக்க நாம் அவர்களை உற்சாகப்படுத்துவதால், தேவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

இரக்கத்தின் ஊழியம், வேலை செய்ய பெலனுள்ளவர்களுக்கு செய்யப்படுவது அல்ல. அது முற்றிலும் உதவியற்ற நிலையிலுள்ளவர்களுக்கு செய்யப்படுவதாகும். உண்மையாகவே உறவினர்களில்லாத, தேவனை நம்புகிற, இரவும் பகலும் தேவனோடு நேரம் செலவிடுகிற விதவைகள் மாத்திரமே, உதவியைப் பெற்றுக்கொள்ள பாத்திரமானவர்கள் என்று பவுல் அறிவுறுத்துகிறார் (1 தீமோ. 5:5). சுகபோகமாய் வாழ்பவர்களுக்கு உதவி செய்யக் கூடாது (1 தீமோ. 5:6). ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் உதவி செய்வதற்கான கொள்கைகள், இங்கு தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. கர்த்தரை நம்புகிறவர்களும், தேவனைத் தேடுகிறவர்களும் மாத்திரமே உதவி செய்யப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு உதவி செய்வதின் மூலம், நாம் அவர்கள் ஜெபங்களுக்கு பதில்களாகிறோம். ஒரு ஜெபத்திற்கு தேவன் கொடுக்கும் பதிலாக நம்மை அவர் பயன்படுத்த நாம் அனுமதியளித்தால், தேவன் நமக்கு பலன் கொடுப்பார் (நீதி. 19:17).

***சுகமாக்கும் ஊழியம்***

சுகவீனமான, பாடுபடுகின்ற, மரித்துக்கொண்டிருக்கும் உலகத்திற்கு சுகத்தைக் கொடுக்கும் ஸ்தாபனமாக, தேவன் திருச்சபையை அழைத்திருக்கிறார். தேவனுடைய சுகமாக்கும் வரங்களை நடைமுறைப்படுத்திக் காட்ட, தேவன் ஐந்துவகை ஊழியங்களை அழைத்திருக்கிறார். கிறிஸ்தவின் ஸ்தல சபைக்கு ஊழியம் செய்யும்படி சுகமாக்கும் வரங்களை விசுவாசிகளுக்கும் தேவன் அளித்துள்ளார். மூப்பரின் ஊழியத்தில் இது ஒரு பகுதியாகும் (யாக். 5:14). ஒரு மூப்பரின் ஊழியம், (வேதத்திலுள்ள ஐந்துவகை ஊழியத்தில், மேய்ப்பரின் ஊழியத்தை மாதிரியாக காட்டுகிற) போதிக்கும் ஊழியத்தையும், நிர்வாகம் பண்ணும் ஊழியத்தையும் உள்ளடக்கியது (1 தீமோ. 5:17; தீத்து 1:9).

ஐந்துவகை ஊழியத்திலில்லாமல், விசுவாசிகளுக்கான ஒன்பது வகை ஊழியத்தில் ஒன்றில் செயல்படுவது சாத்தியமானது. அதேவேளையில், ஐந்துவகையான ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியானவரின் சில வரங்களில் செயல் படுவதுமல்லாமல், விசுவாசிகளின் ஒன்பது வகை ஊழியங்களில் சிலவற்றில் செயல்படவும் வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சுகமாக்கும் வரங்களுக்கும், சுகமாக்கும் ஊழியத்திற்கும் சுவிசேஷகரின்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

வேலைக்கும் வித்தியாசங்களிருக்கின்றன (சுவிசேஷகர்கள் அற்புதங்களைச் செய்பவர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்) (1 கொரி. 12:28, 29).

சுகமாக்கும் இந்த ஊழியம் 'சுகமாக்குதல்களின் வரங்கள்' என்றும் கொரிந்தியரில் குறிப் பிடப்படுகின்றது (1 கொரி. 12:28). இந்த ஊழியத்தையுடையவர்கள் ஸ்தல சபை விசுவாசிகள் மத்தியிலேயே செயல்படுவர். இந்த ஊழியம் குணமாக்குதல்களினுடைய வரங்களின் சாதாரண வரத்திலிருந்து அடையும் இன்னும் அதிகமான வளர்ச்சியாகும். சாதாரண தீர்க்கதரிசன வரத்தின்மேல் தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியமாக இன்னும் அபிவிருத்தியடைவதைப் போலவே, சாதாரண சுகமாக்கும் வரங்களின் அபிவிருத்தியாகவே இந்த ஊழியமும் இருக்கிறது.

*அந்நியபாஷைகள் மற்றும் வியாக்கியானம்பண்ணும் ஊழியம்*

சபையிலுள்ள பலவித பாஷைகளைப் பற்றிப்பேசும்போது, பவுல் இந்த ஊழியத்தைக் குறிப்பிடுகிறார் (1 கொரி. 12:28). ஒரு செய்தியை அறியாத பாஷையில் சொல்லவும், அதை வியாக்கியானம் செய்யவும், தேவன் கொடுத்த விசேஷித்த ஊழியமாகும் இது. சில நேரங்களில் அது பாடலாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் இந்த இரண்டு வரங்களின் செயல்பாடும், தீர்க்கதரிசன ஊழியத்திற்கு சமமானது (1 கொரி. 14:5).

இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட பெண்மணி, இந்த ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒரு முழு புத்தகத்தையும் எழுதியுள்ளார். அந்நியபாஷைகளுக்கு அவர்(ள்) பெற்ற வியாக்கியானத்தின் தொகுப்பே அந்த புத்தகம் ஆகும். அவர்(ள்) பல மணிநேரங்கள் அந்நியபாஷையில் பேசுவார்(ள்) பின்பு அதின் அர்த்தத்தையும் கூறுவார்(ள்). அவருக்காக அதை பதிவு பண்ணும்படி ஒருவரை வைத்துள்ளார். நான் அந்தப் புத்தகத்தை வாசித்தேன். அது எனக்கு பக்திவிருத்தியை உண்டாக்கிற்று.

இன்றைய நாட்களின் சபை, இந்த ஊழியத்தின் முன்னேற்றத்தை அதிகமாய் பார்க்க வில்லை. தேவ மனிதர்கள், தனிமையில் அந்நியபாஷை பேசி அதின் அர்த்தத்தையும் சொல்லி தாங்கள் பக்திவிருத்தி அடைவதை ஒத்துக்கொள்கின்றனர். அது ஸ்தல சபையில் ஊழியமாக மாறினால் எவ்வளவு நல்ல தாக்கம் இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஒருமணிநேரம் தீர்க்கதரிசனம் சொல்வதையோ அல்லது ஒருமணிநேரம் அந்நிய பாஷையில் பேசி அர்த்தம் சொல்வதையோ இந்த நாட்களில் காண்பது அரிதாக இருக்கின்றது. புதிய ஏற்பாட்டு நாட்களில், இந்த நிகழ்வு சாதாரணமானது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 2*

# ஐந்துவகை ஊழியங்கள்

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப் பூரணப்படுத்தவே, தேவன் இந்த ஐந்துவகை ஊழியங்களை சபையிலே வைத்துள்ளார் (எபே. 4:11, 12). இந்த ஐந்துவகை ஊழியங்கள் இல்லாமல், இயேசுகிறிஸ்துவின் திருச்சபை, இந்த பூமியில் பூரணப்படுத்தப்படவே முடியாது. இந்த ஐந்துவகை ஊழியங்களின் மூலம், சபையானது இயேசுகிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடையும், மற்றும் பலவிதமான போதனைகளாகிய காற்றினாலே அலைகளைப் போல இன்னும் அலைகழிக்கப்படமாட்டாது (எபே. 4:13, 14).

### *ஐந்துவகை ஊழியத்தின் தகுதிகள்*

ஐந்துவகை ஊழியத்தில் நிற்பவர்கள், பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், விசுவாசிகளின் ஒன்பது வகை ஊழியங்கள், இரண்டிலும் சேர்ந்து செயல்படும்படியாக, தேவனால் தயார் படுத்தப்பட்டு தகுதிப்படுத்தப்பட்டவர்களாயும் இருக்கின்றனர். ஐந்துவகை ஊழியத்தில் உள்ள ஒவ்வொரு வேலைக்கும் வித்தியாசமான சேர்க்கைகள் அல்லது கூட்டுகள் இருக்கின்றன. ஆனாலும், ஐந்துவகை ஊழியத்தில் தேவனுடைய அழைப்பை வெற்றிகரமாக நிறைவேற்ற, குணாதிசய தகுதிகளும் இன்றியமையாததாகிறது.

ஐந்துவகை ஊழியங்கள் கிறிஸ்துவின் ஐந்து ஊழிய வரங்களாகவும் குறிப்பிடப்படுகின்றன (எபே. 4:7–11). வரங்கள் என்ற வார்த்தையின் முழு அர்த்தத்தில், ஐந்துவகை ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட ஒரு நபர், சரியான குணாதிசய வளர்ச்சி இல்லாமலும், அவரவர்களுடைய வேலையில் செயல்பட முடியும். ஊழிய வரங்கள் மற்ற வரங்களைப் போலவே, கிரியைகளின் அடிப்படையிலல்லாமல், கிருபையின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன.

### *ஐந்துவகை ஊழியங்களில் இயேசுகிறிஸ்து*

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் இருந்தபோது ஐந்துவகை ஊழியங்களில் செயலாற்றினார்: அவர் ஒரு அப்போஸ்தலர் (எபி. 3:1). அவர் ஒரு தீர்க்கதரிசி (மாற். 6:4; அப். 3:22–26). அவர் ஒரு சுவிசேஷகர் (மாற். 1:14). அவர் ஒரு மேய்ப்பர் (யோவா. 10:11). அவர் ஒரு போதகர் (மாற். 4:1; யோவா. 3:2). தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும்படி, இயேசு கிறிஸ்து பரமேறினபோது, இந்த ஊழிய வரங்களை அவர் திருச்சபைக்கு பகிர்ந்து கொடுத்தார் (எபே. 4:10, 11). அவர் மீந்திருந்த அபிஷேகம், இந்த பூமியிலே திருச்சபையோடே விட்டுச் செல்லப்பட்டது.

சில தேவமனிதர்கள் ஒன்றுக்கும் அதிகமான ஊழிய வேலையில் செயல்படுவார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று ஊழிய வேலைகளில் செயல்பட்டார். அவர் ஒரு அப்போஸ்தலர், ஒரு சுவிசேஷகர் மற்றும் ஒரு போதகர் (2 தீமோ. 1:11). ஐந்துவகை ஊழியங்கள், இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தினுடைய நேரடி பிரதிபலிப்பே ஆகும். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் போன்று நாம் பார்க்க முடியாததின் ஒரே காரணம், வெகுசில தேவமனிதர்களே இயேசுவைப்போல ஐந்தவகை ஊழியங்களில் இருப்பதுதான்.

### *ஒரு அப்போஸ்தலரின் ஊழியம்*

வேதத்தில் இரண்டுவகையான அப்போஸ்தலர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆட்டுக் குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் (வெளி. 21:14). யூதாஸ்காரியோத்திற்கு பதிலாக வைக்கப்பட்ட மத்தியாஸை தவிர மற்ற எல்லா அப்போஸ்தலர்களும், கர்த்தராகிய

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இயேசுகிறிஸ்துவினால் தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையான அப்போஸ்தலர்கள். இந்த அப்போஸ்தலர்களின் தகுதி என்னவென்றால், யோவானின் ஞானஸ்நானம் முதல் பரமேறும் வரைக்கும் இயேசுவோடே கூட இவர்கள் சரீரத்தில் இருந்திருக்க வேண்டும் (அப். 1:21, 22).

ஏனெனில் அப்போஸ்தலனாகிய பவுல், இயேசுவுடன் அவருடைய வாழ்விலும் ஊழியத்திலும் சரீரப்பிரகாரமாக இல்லாதிருந்ததினால், இந்த வகையில் தகுதியுள்ளவராகவில்லை. ஆயினும், இயேசுவை அவருடைய உயிர்த்தெழுதலுக்கு பின்பு, பவுல் சந்தித்திருக்கிறார் (1 கொரி. 11:23; 15:8). இயேசு பிரதான மூலைக்கல்லாய் இருக்கும் சபையின் அஸ்திபாரக் கற்களாய் அங்கம் வகிக்கும் உண்மையான அப்போஸ்தலர்கள், உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்த தகுதி உடையவர்களாய் இருக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் சபைக்காக இயேசுவிடமிருந்து அஸ்திபார வெளிப்பாட்டை பெற்றிருக்க வேண்டும் (எபே. 2:20; 3:5).

இரண்டாவது வகையான அப்போஸ்தலர்களை, பவுலின் வகையான அப்போஸ்தலர்கள் என்று வகைப்படுத்தலாம். இவர்கள் தேவனால் அழைக்கப்பட்டு, தேசங்களுக்கும், ஜாதிகளுக்கும், இனங்களுக்கும் சபைகளை ஸ்தாபிக்கும்படியாய் அனுப்பப்பட்ட தனிநபர்கள். பவுல் புறஜாதியாருக்காக அழைக்கப்பட்டதுபோல், பேதுரு யூதருக்காக அழைக்கப்பட்டார் (கலா. 2:8). சபையைக் கட்டுகிறவன் என்ற தனித்துவமான அடையாளம் சிறப்பாக தெரிய வேண்டும். ஒரே ஒரு சபையைக் கூட ஆரம்பிக்காத மக்கள், சிலநேரங்களில் தங்களை அப்போஸ்தல ஊழியத்தில் இருப்பதாக உரிமைபாராட்டுவார்கள். அவர்களோடு உரையாடும் போது, அப்போஸ்தல ஊழியத்தைப் பொறுத்தவரையில் அவர்களால் ஒரு உதவியையும் செய்ய முடியாது என்பதை கண்டிருக்கிறேன். ஏனெனில் ஒரு சபையை ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்களை அவர்கள் புரிந்துகொள்ளாதிருக்கிறார்கள்.

மேலும், சபையை ஸ்தாபிக்கும் கொள்கைகளை மாத்திரம் அறிந்திருப்பது அப்போஸ்தலரின் ஊழியமல்ல. விசேஷ அற்புத அடையாளங்கள் செயல்படுத்தப்படுவதும் அதற்கு அவசியமாகிறது. ஐந்துவகை ஊழியத்தில் உள்ள ஒரு நல்ல போதகர், இந்தக் கொள்கைகளில் சிலதை ஒருவேளை போதிக்க முடியும். ஆயினும், அப்போஸ்தல ஊழியத்தில் நிலைக்க வேண்டுமானால், ஒரு அப்போஸ்தலனின் அற்புத அடையாளங்களை ஒருவர் பெற்றிருக்க வேண்டும் (2 கொரி. 12:12). பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வரங்களால் அப்போஸ்தலர் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்; விசேஷமாக விசுவாச வரத்தினாலும், அற்புதங்களை செய்யும் சக்தியாலும் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு அப்போஸ்தலர் தன்னுடைய ஊழியத்தில் செயல்படும்படி, வல்லமை வரங்களோடு கூட வெளிப்பாட்டு வரங்களினாலும் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்பட வில்லை (எபே. 3:5). தலைமைத்துவ பதவியைக் கருத்தில் கொண்டு, ஒரு அப்போஸ்தலர் நிர்வாகம் செய்யும் ஊழியத்தில் செயல்படுவதும் அவசியமாகிறது.

தாங்கள் ஆரம்பித்த சபைகளின் மேல் அப்போஸ்தலர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரம் இருக்கிறது. ஆனால், தாங்கள் ஆரம்பிக்காத சபைகளின் மேல் அவர்களுக்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை (1 கொரி. 9:1, 2, 11, 12). சபையாரால் தேர்வு செய்யப்பட்ட ஏழு மூப்பரை அப்போஸ்தலர்கள்தான் நியமித்தனர் (அப். 6:3, 6). பவுலும் பர்னபாவும், தாங்கள் ஆரம்பித்த சபைகளின் மேல் மூப்பர்களை ஏற்படுத்தியவர்களாவார்கள் (அப். 14:23).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

தன்னுடைய கிரியைகளின் மேல் ஒரு ஸ்தாபனம் அல்ல, தேவனே எப்போதும் மனிதர்களை பொறுப்பில் அமர்த்துகிறார். அதிகார துஷ்பிரயோகத்தைக் குறித்து பயப்படும் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், தேவன் உண்டாக்கின அமைப்பில் தவறில்லை என்பதுதான். ஆனால், அந்த அமைப்பில் உள்ள மனிதர்களே தவறு செய்கின்றனர். கிறிஸ்துவின் ஸ்தாபன அமைப்பு, அவர் ஒருவரே அதிகாரமுடைய வராய் இருப்பது போன்று இருக்கும். வேதத்திலுள்ள அரசாங்க அமைப்பு மிகத்தெளிவாக இருக்கிறது. ஒரே பிரச்சனை என்னவென்றால், சில வேளைகளில் தலைவர்களின் குணாதிசயம், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்திற்கும் பொறுப்பிற்கும் ஏற்ற அளவிற்கு இருப்பது இல்லை. தேவனுடைய சபையில் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்திற்கு ஏற்ற குணாதிசயங்கள் உள்ள தலைவர்களையும், தலைவிகளையும் தேவன் நமக்கு தந்தருளுவாராக.

### *தீர்க்கதரிசியின் ஊழியம்*

புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி செயல்படும் விதத்தில் செயல்படுவதில்லை. புதிய ஏற்பாட்டில், விசுவாசிகள் ஏற்கெனவே தங்கள் வாழ்க்கையில் பெற்றுக்கொண்ட வழிகாட்டுதலை உறுதி செய்ய மாத்திரமே தீர்க்கதரிசிகள் உள்ளனர். சபையை ஸ்தாபிப்பதில் அப்போஸ்தலரின் ஊழியத்தை தீர்க்கதரிசிகள் நிறைவு செய்கின்றனர் (அப். 11:27–30; 15:32, 40, 41).

சிலவேளைகளில், தீர்க்கதரிசிகள் என்றால் நீண்ட தாடிகளோடும், மோசமாக தோற்றம் அளிக்கும் முகங்களோடும், ‘கர்த்தர் சொல்கிறது என்னவென்றால்’ என்று எப்போதும் சொல்லும் கரகரப்பான சத்தத்தோடு கூடிய, தனிமையான சந்நியாசிகள் என்ற கருத்தை உடையவர்களாய் இருக்கின்றனர். வேதத்தில் தீர்க்கதரிசிகள் கூட்டமாக பிரயாணம் பண்ணி, ஸ்தல சபையோடு கூட நெருக்கமாக வேலை செய்ததாக தெரிகிறது. அந்தியோகியாவுக்கு அகபு, தீர்க்கதரிசிகளின் கூட்டத்தோடு வந்தார் (அப். 11:27, 28). அந்தியோகியாவுக்கு வந்த அநேகரில் அவரும் ஒருவர். அந்தியோகியா சபையிலேயே, ஒரு கூட்டம் தீர்க்கதரிசிகளும் போதகர்களும், ஒன்றாக நெருக்கமாக வேலை செய்தனர் (அப். 13:1).

அப்போஸ்தலர்களைப் போலவே தீர்க்கதரிசிகளும், பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட்டு வரங்களில் செயல்படுவது அவசியமாகிறது (எபே. 3:5). பழைய ஏற்பாட்டில், தீர்க்கதரிசி அடிக்கடி ஞானதிருஷ்டிகாரன் என்று அழைக்கப்பட்டார். ஏனெனில் அவர் ஒழுங்காக வெளிப்பாட்டு வரங்களில் செயல்பட வேண்டியவராக இருந்தார் (1 சாமு. 9:9). ஒரு தீர்க்கதரிசி ஞானத்தை போதிக்கும் வசனத்தில் செயல்பட்டால், அவருடைய ஊழியத்தின் தாக்கம் அதிகமாய் உணரப்படும் (அப். 11:28; 21:10, 11). வெறும் தீர்க்கதரிசன வரம் எந்த வெளிப்பாட்டையும் அளிப்பதில்லை. ஆனால், ஞானத்தைப் போதிக்கும் வசனத்தில் செயல்படும் ஒரு தீர்க்கதரிசி, எதிர்காலத்தில் நிகழக்கூடிய அநேக காரியங்களை அறிவித்து உறுதிப்படுத்துவார்.

பரிசுத்த ஆவியானவரின் வாக்கு வரங்களில் விசேஷமாக தீர்க்கதரிசன வரத்தில் செயல்படுவது, ஒரு தீர்க்கதரிசிக்கு அவசியமாயிருக்கிறது (1 கொரி. 14:31). தீர்க்கதரிசிகள் புத்திசொல்லும் ஊழியத்திலும், தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியத்திலும் பழக்கமானவர் களாக இருப்பது அவசியம் (அப். 15:32). தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியத்தின் அபிஷேகம், அடிமட்டத்தில் தீர்க்கதரிசியின் ஊழியத்தைப் போலவே இருப்பதால், புதிதாய் வரும் தீர்க்கதரிசிகள் தங்கள் ஊழியத்தைக் கற்றுக்கொள்வதற்கு அது ஒரு இயற்கையான தளமாக அமையும் (1 கொரி. 14:31, 32). எலியா தனது தீர்க்கதரிசன அபிஷேகத்தில் செயல்பட, அவருக்கு இசைக்கருவி வாசிப்பவன் ஒருவன் தேவைப்பட்டான் (2 இராஜா. 3:15) முன் பார்த்தது போல், புத்தி சொல்லும் ஊழியத்தின் ஒரு பகுதி சங்கீதக்காரனாக

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

செயல்படுவதாகும். இசையும், தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியமும், ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையவை (1 சாமு. 10:5; 1 நாளா. 25:2, 3).

### *சுவிசேஷகரின் ஊழியம்*

ஒரு சுவிசேஷகரின் ஊழியம், அற்புதங்களைச் செய்கிறவர்கள் என்றும் அழைக்கப்படு கிறது (1 கொரி. 12:29). சுவிசேஷகர்கள், அவர்கள் அழைப்பின் தன்மைப்படி, ஊர் ஊராக பிரயாணம் செய்பவர்கள். அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, விசேஷமாக சுவிசேஷம் ஒருபோதும் பிரசங்கிக்கப்பட்டிராத இடங்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க போகிறார்கள். ஒரு சபையை ஸ்தாபிக்க, அவர்கள் அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து வேலை செய்வார்கள் (அப். 8:4–25). பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வரங்களை அப்பியாசிப்பது, அவர்களின் நிச்சயமான தேவையாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், பலத்த அற்புத அடையாளங்களுடன் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும் (ரோம. 15:19).

சுவிசேஷகர்கள் புத்திசொல்லும் ஊழியத்திலும், போதிக்கும் ஊழியத்திலும் செயல்படக் கற்றுக்கொள்வது அவசியமாகிறது. ஐந்துவகை ஊழியத்திலுள்ள ஒரு போதகரைப் போன்று போதிக்க இவர்கள் அபிஷேகிக்கப்படாமலிருக்கலாம். ஆனால், இவர்கள் அடிப்படை சுவிசேஷத்தை போதிக்கும் தகுதியுடையவர்களாய் இருப்பது அவசியம். தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளைக் குறித்து, சுவிசேஷகர் பிலிப்பு பிரசங்கித்தார் (அப். 8:12). அநேக இடங்களில் அடிப்படை போதனைகள் செய்யப்படாவிட்டால் அவிசுவாசத்தின் பிடி, தேவனுடைய வல்லமை செயல் முறைப்படுத்தப்படுவதைத் தடுக்கும். அற்புதங்களைச் செய்கிறவர்கள், விசுவாசக் கேள்வியினாலேயே அப்படி செய்கின்றனர் (கலா. 3:5). விசுவாசம் வருவதற்கு, தேவ வார்த்தையின் அடிப்படை அறிவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

முழுவதும் தேர்ச்சியடைந்த ஒரு சுவிசேஷகர், சுவிசேஷத்தின் ஐந்து பகுதிகளையும் அறிவிக்க வேண்டும். 'சுவிசேஷம்' என்னும் பதத்தின் கிரேக்க வார்த்தை 'யுவாங்கிலியான்' 'euangelion' யிலிருந்து 'சுவிசேஷகர்' யுவாஞ்சலிஸ்டிஸ் – euangelistes என்ற வார்த்தையும் வருகிறது. சுவிசேஷகர்கள் சுவிசேஷத்தை சுமந்து செல்பவர்களாக இருக்க வேண்டும் (மாற்.16:15–18; லூக். 4:18, 19). அவர்கள் கொண்டுவரும் செய்தி, கிறிஸ்துவின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும்.

| | | |
|---|---|---|
| 1. | பாவம் மற்றும் பாவங்களிலிருந்து இரட்சிப்பு | நம்முடைய இரட்சகர் |
| 2. | பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் | நம்முடைய ஸ்நானகர் |
| 3. | சுகமாக்குதல், பிசாசுகளை துரத்துதல் | நம்மை சுகமாக்குபவர் மற்றும் விடுவிப்பவர் |
| 4. | யூபிலி (லேவி. 25:8–17, 39–41) | நமது தேவைகளை சந்திப்பவர் |
| 5. | தேவனுடைய இராஜ்ஜியம் | நம்முடைய வரப்போகும் இராஜா |

பிலிப்பு, சமாரியர்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கித்தார் (அப். 8:5, 12).

புத்திசொல்லும் ஊழியத்தின் ஒரு பகுதி ஆத்தும ஆதாயம் செய்வதாகும். அது சுவிசேஷகரின் ஊழியத்தில் ஒரு சிறிய அளவு தான். விசுவாசிகளின் ஸ்தல சபையில் ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் என்னும் தளத்திலிருந்து, அநேக சுவிசேஷகர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். சுவிசேஷகரின் வேலை, புத்திசொல்லும் ஊழியத்தைவிட லட்சக் கணக்கான மடங்கு வலிமையுள்ளது என்பதைத் தவிர, அபிஷேகம் ஒரேவிதமானதுதான். சுவிசேஷகர் அறிவிக்கிறார், போதகர் விளக்குகிறார். இந்தக் கடைசி நாட்களில், இன்னும் அதிகமான அற்புதங்களைச் செய்பவர்களை தேவன் எழுப்புவாராக.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*மேய்ப்பரின் ஊழியம்*

'பாஸ்டர்' என்னும் வார்த்தை, வேதாகம ஆங்கில மொழிபெயர்ப்பில் ஒரே ஒரு முறைதான் வருகிறது. ஆனால், அதே கிரேக்க வார்த்தை 'பொய்மென்' 'Poimen' உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் மற்ற இடங்களில், அது மேய்ப்பர் என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது (எபே. 4:11; யோவா. 10:11–16). பாஸ்டர்கள் உள்ளூர் சபையிலுள்ள உள்ளூர் மேய்ப்பர்கள் ஆவார்கள். புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களில் அவர்கள் மூப்பர்கள் என்றும் கண்காணிகளென்றும் அழைக்கப்பட்டார்கள். வேதத்தில் வரையறுக்கப்பட்டபடியே கண் காணிகள், ஒரு கூட்டம் மூப்பர்களுக்கு தலைவராவார். ஆனால் 'கண்காணி' மற்றும் 'மூப்பர்' என்ற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று மாற்றி உபயோகப்படுத்தப்பட்டுள்ளன (தீத். 1:5, 7; 1 தீமோ. 3:1, 2; 5:17; அப். 20:17, 28).

ஸ்தல சபையின் ஆரம்ப நிலையில், வாக்குவரங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததா கையால், பரிசுத்த ஆவியானவரின் வாக்கு வரங்களை அப்பியாசிப்பது மேய்ப்பர்களுடைய தேவையாயிருக்கிறது (1 கொரி. 14:26, 31, 39). தீமோத்தேயுவின் மீது கைகளை வைக்க மூப்பர்கள் சங்கத்தை அமைத்ததும் மேய்ப்பர்களே (1 தீமோ. 4:14). 'மூப்பர்களின் சங்கம்' என்ற வார்த்தையும் 'மூப்பர்' என்ற வார்த்தையும் கிரேக்க வார்த்தையான 'பிரஸ்பியுடரோஸ்' 'Presbuteros' என்ற ஒரே வார்த்தையிலிருந்து வந்தன. இந்த மேய்ப்பர்கள் குழுவே சேர்ந்து வந்து, தீமோத்தேயுவின் மீது கைகளை வைத்து தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் (1 தீமோ. 4:14). மேய்ப்பர்கள் வாக்கு வரங்களை செயல்படுத்தக் கற்றுக்கொள்வது அவசியமாய் இருக்கிறது.

மூப்பர்கள் கண்காணிகள் ஆகியோருடைய தகுதிகளைப் பட்டியலிடும்போது, மேய்ப்பர் என்ற ஸ்தானத்தில் நிற்க ஒரு நபர், விசுவாசிகளின் ஒன்பது வகையான ஊழியங்களில் மூன்றில் பரிட்சயப்பட்டிருப்பது அவசியம் என்று காண்கிறோம். ஐந்துவகை ஊழியத்திலுள்ள போதகரைப் போன்று போதிக்கும் அபிஷேகம் இல்லாவிட்டாலும், அவர் போதிக்கும் ஊழியத்தில் வலுவாக இருக்க வேண்டியது அவசியம் (1 தீமோ. 3:2). எதிர்பேசுகிறவர் களுக்கு ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், கண்டனம் பண்ணவும் வல்லவனுமாக ஒரு மேய்ப்பர் இருக்க வேண்டும் (தீத். 1:9).

இரண்டாவதாக, ஒரு மேய்ப்பர் நிர்வாகம் செய்யும் ஊழியத்தில் பழக்கமுள்ளவராக இருக்க வேண்டும். ஒரு அப்போஸ்தலரைப் போன்று அவர் செயல்பட வேண்டிய அவசியமில்லா விட்டாலும் அவருடைய தலைமைத்துவ வேலையின் தன்மைக்குத்தக்கபடி, இந்த ஊழியத்தில் அவர் செயல்பட வேண்டியதாயிருக்கிறது. இந்தக் காரணத்திற்காகவே, ஒரு மேய்ப்பர் தேவனுடைய சபையை நடத்துவதற்கு முன்பாக, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவராய் இருக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார் (1 தீமோ. 3:4, 5; தீத். 1:6).

மூன்றாவதாக, ஒரு மேய்ப்பர் சுகமாக்கும் ஊழியத்தில் பழக்கமானவராக இருக்க வேண்டும். அவர் ஒரு அப்போஸ்தலரைப் போன்றோ, சுவிசேஷகரைப் போன்றோ இதில் செயல்பட முடியாமலிருக்கலாம், ஆனால் சுகமாக்கும் ஊழியத்திற்கான எல்லா தேவைகளும் அவரிடமே திருப்பிவிடப்படுகின்றன (யாக். 5:14). வியாதியஸ்தருக்கான விசுவாச ஜெபத்தை ஜெபிக்கவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு சுகமாக்கும் ஊழியத்தைக் கொண்டுவரவும் அவர் சமர்த்தராக இருக்க வேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*போதகரின் ஊழியம்*

எபேசியர் புத்தகத்தில், இந்த ஊழியம் கடைசியாக வரிசைப்படுத்தப்பட்டிருந்தாலும், அது சிறியதானதல்ல (எபே. 4:11). இயேசுகிறிஸ்துவின் சபையில் ஒரு போதகரின் ஊழியம், ஒரு மேய்ப்பரின் ஊழியத்தைவிட அல்லது ஒரு சுவிசேஷகரின் ஊழியத்தைவிட மேலானது. ஒரு அப்போஸ்தலரின் ஊழியத்திற்கும் மற்றும் ஒரு தீர்க்கதரிசியின் ஊழியத்திற்கும் அடுத்து இது மூன்றாவதாக வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது (1 கொரி. 12:28). சபையில், ஐந்துவகை ஊழியத்தில் போதகரின் ஊழியத்தைப் பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் எபேசியர் புத்தகத்தில், உலகத்திற்குள் அனுப்பப்பட்ட ஐந்துவகை ஊழியத்தை அவர் குறிப்பிடுகிறார்.

ஒரு சபையை முதிர்ச்சிக்கு கொண்டுவருவது போதகரின் ஊழியமே. மூவாயிரம் ஆத்துமாக்கள் மனந்திரும்பினபிறகு, எருசலேமிலுள்ள சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:42). இளம் கிறிஸ்தவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தில் போதிக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுவது அவசியமாகிறது. அந்தியோகியா சபையை, பலமான மிஷனரி சபையாக வளருமளவிற்கு கட்டி எழுப்பினதே போதிக்கும் ஊழியம்தான் (அப். 11:26; 13:1).

எபேசு பட்டணத்தில் தேவனுடைய மிகப்பெரிய அசைவிற்கு வழிவகுத்ததே பவுலின் போதிக்கும் ஊழியம்தான். திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையில் இரண்டு வருடத்திற்கு இரவும் பகலும், பவுல் போதித்துக் கொண்டிருந்தார் (அப். 19:9, 10). இரண்டு முறை, முன்னூற்று அறுபத்தைந்து நாட்கள், ஒரே இடத்தில் போதிக்கும் கருத்தரங்கு நடப்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஆயினும் பவுல் அனுதினமும் போதித்தார். பவுல் ஐந்துவகை ஊழியத்திலும் போதகராக அழைக்கப்பட்டிருந்தார் (2 தீமோ. 1:11). தேவனுடைய வார்த்தையைப் போதித்ததின் விளைவாக, ஆசியா மைனரிலிருந்த எல்லாரும் தேவனுடைய வசனத்தைக் கேட்டார்கள் (அப். 19:10). பவுலின் கைகளினால் தேவன் விசேஷித்த அற்புத அடையாளங்களை எங்கெல்லாம் செய்தாரோ, அங்கெல்லாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான அசைவாடுதல் பின் தொடர்ந்தது (அப். 19:11, 12).

இயேசுவே, போதனையை சுகமாக்குதலுக்கு மேலாக வைத்துள்ளார். சுகமாகும்படி, திரள்கூட்டம் அவரை நெருக்குகையில், அவர் வசனத்தைப் போதிக்கும்படி ஒரு படகில் ஏறினார் (லூக். 5:1; 6:17–19). அவர்களுக்கு எந்த அளவு சுகம் தேவைப்படுகிறதோ, அந்த அளவுக்கு அவருடைய போதனையும் அவர்களுக்கு தேவையாயிருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தார். வானமும் பூமியும் ஒழிந்துபோம் ஆனால், அவருடைய வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்று இயேசு கூறினார் (லூக். 21:33).

ஐந்துவகை ஊழியத்தில் போதகரின் வேலை, எந்த வகை ஆவிக்குரிய வரங்களின் குழுவிலும் செயல்பட வேண்டும் என்ற தேவையினாலும் மட்டுப்படுத்தப்படவில்லை. பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களில் எந்த ஒரு குழுவிலும் ஐந்துவகை ஊழியத்திலுள்ள போதகர் செயல்பட முடியும். விசுவாசிகளின் ஒன்பது வகை ஊழியத்தில், ஐந்துவகை ஊழிய போதகர், போதிக்கும் ஊழியத்திலும், புத்திசொல்லும் ஊழியத்திலும் பழகியிருக்க வேண்டும். இந்த இரண்டுவகை அபிஷேகங்களும் போதிக்கும் அபிஷேகத்தோடு சிறிய வழியில் தொடர்புடையது. போதகரின் வேலையிலிருக்கும் அபிஷேகம், போதிக்கும் ஊழியத் திலிருக்கும் அபிஷேகத்தைவிட லட்சம் மடங்கு வல்லமையுள்ளதாக இருந்தாலும், ஐந்துவகை ஊழியத்திலிருக்கும் போதகருக்கு, இதுதான் ஆரம்பிப்பதற்கு பொதுவான தளம் ஆகும்.

தேவனுடைய வசனத்தில் கொலோசெயர்கள் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கவும், கர்த்தருக்குள் ஒருவருக்கொருவர் போதித்து கடிந்து கொண்டு புத்திசொல்லவும் பவுல் தன்னுடைய எழுத்துக்களில் புத்தி சொல்கிறார் (கொலோ. 3:16). போதிக்கும் அபிஷேகத் திற்கும், கடிந்து கொண்டு புத்தி சொல்லும் அபிஷேகத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

எல்லா புத்திமதிகளிலும் போதனை இல்லாமலிருக்கலாம். ஆனால், எல்லா போதனைகளும் எப்போதும் புத்திசொல்லும். முன்பு கருகளாய் தோன்றின சத்தியத்தை போதனையானது வெளியரங்கமாக்கி, நம்முடைய கிறிஸ்தவ நடக்கையில் புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்தோடு நடக்க நம்மைத் தூண்டுகிறது. அப்பொல்லோவின் போதிக்கும் ஊழியம், கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தது (அப். 18:27).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *அத்தியாயம் 3*

# கிருபையின் வெவ்வேறான படிகள் மற்றும் செயல்பாடுகள்

பல்வேறு ஊழியங்களின் எல்லா செயல்பாடுகளும், நம்முடைய வாழ்வில் உள்ள தேவ கிருபையின் விளைவே ஆகும். நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே வரங்கள் வித்தியாசப்படும் என்று பவுல் கூறினார் (ரோம. 12:6). பேதுருவும், யாக்கோபும் மற்றும் யோவானும் அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக பவுலுக்கு வலதுகை கொடுக்கும்போது, புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாகும்படி தேவகிருபை அவருக்கு கொடுக்கப்பட்டிருப்பதை கண்டுகொண்டார்கள் (கலா. 2:9). கிருபையின் மூன்று வித்தியாசமான பகுதிகள் இருக்கின்றன: இரட்சிப்பின் கிருபை, ஊழிய கிருபை மற்றும் செயல்படும் கிருபை.

### *கிருபையின் மூன்று பகுதிகள்*

அநேக கிறிஸ்தவர்கள் இரட்சிப்பின் கிருபையில் பழக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். மறுபடியும் பிறக்கும்போது எல்லா கிறிஸ்தவர்களும், ஒரே அளவான இரட்சிப்பின் கிருபையைப் பெற்றுக்கொள்கிறார்கள் (எபே. 2:8). நம்முடைய தகுதி அல்லது கிரியையின் அடிப்படையில் கிருபை கொடுக்கப்படுவதில்லை. ஆனால், நம்முடைய வாழ்க்கையில் உள்ள தேவனுடைய அன்பு மற்றும் இரக்கத்தின் அடிப்படையிலேயே கிருபை கொடுக்கப்படுகிறது. அவருடைய கிருபையினாலே கிறிஸ்துவுக்கு சுதந்தரரும் உடன் சுதந்தரருமாய் மாற்றப்பட்டிருக்கிறோம்.

ஊழிய கிருபை என்பது அவருக்காக ஒரு வேலையையோ அல்லது ஊழியத்தையோ செய்ய கொடுக்கப்படும் கிருபையாகும். நம்முடைய வாழ்க்கைக்கென்று தேவனால் முன் குறிக்கப்பட்ட திட்டத்தின்படியே ஒவ்வொரு தனிநபருக்கும் தேவன் வித்தியாசமான கிருபைகளை அளிக்கிறார். தேவனுடைய கிருபையினாலே, தன்னுடைய ஊழியத்தை செயல்படுத்தினதாக பவுல் உணர்ந்துகொண்டார் (1 கொரி. 15:10). ஆவிக்குரிய அலுவல்களில் நம்மை நிறுத்தியது மனிதர்களல்ல. தேவன் ஒருவரே வித்தியாசமான ஊழியங்களை நியமிக்கிறார் (1 கொரி. 12:28). தான் பிறக்கும் முன்பாகவே அழைக்கப்பட்டதாக பவுல் கூறினார் (கலா. 1:15, 16). உண்மையாகவே, தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்னே நம்மைத் தெரிந்துகொண்டு முன்குறித்திருக்கிறார் (எபே. 1:4, 5). அஸ்திபார சத்தியங்களின் பதிமூன்றாம் தொகுப்பில், முன்குறித்தலின் உபதேசத்தைக் குறித்து மிக விரிவாக கொடுக்கப்பட்டிருக்கும்.

நாம் இந்த வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை, தேவனே செய்கிறார் என்பதை தெரிந்துகொள்வது இப்பகுதிவரைக்கும் நமக்குப் போதுமானது. நம்முடைய ஒரே தெரிந்தெடுப்பு அவருக்கு கீழ்படிவதா அல்லது கீழ்படியாமலிருப்பதா என்பதைத் தெரிந்துகொள்வதே. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நம்முடைய சிருஷ்டிகர். மற்றும் நாம் அவருடைய அனந்த ஞானத்தை நம்ப முடியும். ஏற்றுக்கொள்வதை கடினமாய் காண்பவர்கள், சுயாதீனம் என்ற மனிதப் பெருமையோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் தேவனை சந்திக்கும்முன்பு, நாமே எல்லாவற்றையும் நம்மால் செய்துவிடலாம் என்று நினைத்துக் கொள்கிறோம்; நாம் தேவனை விட புத்திகூர்மையானவர்கள் என்று எண்ணிக் கொள்கிறோம். நாம் நம்மைப் பற்றி தெரிந்துகொண்டிருப்பதைவிட, தேவனுக்கு நம்மைப் பற்றி அதிகம் தெரியும். பிரசித்திபெற்ற நிலையானாலும் அல்லது பின்னணியிலுள்ளதாயினும், அங்கீகரிக்கப்பட்டதாயினும் அல்லது அங்கீகரிக்கப்படாததாயினும், நம்முடைய வாழ்வைக் குறித்த தேவனுடைய பூரண சித்தத்தை செய்ய, நம்மைத் தாழ்த்துவது அவசியமாய் இருக்கிறது. ஏனெனில் நம்முடைய பலன் பரலோகத்திலிருக்கிறது. இரண்டு காரணங்களுக்காக, தேவனுடைய தெரிந்தெடுப்புதான் நமக்கு மிகச்சிறந்தது என்று நாம் நம்பலாம். தேவன் தனக்குள் உள்ள எல்லாவற்றோடும் தம்முடைய குமாரனையே நமக்காக தருமளவிற்கு நம்மை நேசிக்கிறார் மற்றும் அவர் அனந்த ஞானமுள்ளவர்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

நம்முடைய வாழ்வைக் குறித்த அவருடைய சித்தத்தை தேவன் தீர்மானித்துவிட்டபடியால், அவருடைய சித்தத்தை செய்வதற்கு அவருடைய கிருபையை நமக்குப் பகிர்ந்தளிக்கிறார். தேவனுடைய கிருபை என்பது தகுதியற்ற நிலையில் பாராட்டப்படும் வெறும் தயவு மட்டும் அல்ல. கிருபை என்பது அவருடைய ஆற்றலையும் வரத்தையும் நமக்குள் பகிர்ந்தளிப்பது. அது நம்முடைய ஆவியில் தொட்டு உணரக்கூடிய ஒரு பகிர்ந்தளிப்பு ஆகும். பிரயாசப் பட்டது, தான் மட்டும் அல்ல. ஆனால், தன்னோடு இருக்கிற கிருபையும் பிரயாசப்பட்டது என்று பவுல் கூறுகிறார் (1 கொரி. 15:10). தன்னுடைய கிருபை பவுலுக்கு போதும் என்று தேவன் சொன்னார். மற்றும் பவுலுடைய பலவீனத்திலே தேவனுடைய பலம் பூரணமாய் விளங்கிற்று (2 கொரி. 12:9).

'கிருபை' என்ற வார்த்தையும் 'பலம்' என்ற வார்த்தையும் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளும் வகையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. பழைய உடன்படிக்கையில் கிருபை என்பது தகுதியற்ற நிலையில் பாராட்டப்படும் தயவு மற்றும் ஆவிக்குரிய உபயோக பொருள் ஆகிய இரண்டும் ஆகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் பலப்படும்படியாக தீமோத்தேயு வுக்கு கூறப்பட்டது (2 தீமோ. 2:1). தேவனுடைய சித்தத்தை அவருடைய வரங்களின் மூலம் செய்ய, நம்மை தகுதிப்படுத்த நம்முடைய மனித ஆவிக்குள் கிருபை பகிர்ந்தளிக்கப் படுகிறது. தேவனுடைய பல்வேறு வகையான ஊழியங்களில் செயல்படுவதற்கு நாம் தகுதிப்பட, ஊழிய கிருபை வித்தியாசமான வழிகளிலும், அளவுகளிலும் பகிர்ந்தளிக்கப்படுகிறது (ரோம. 12:6).

ஒவ்வொரு பாத்திரத்தின் மூலம் எப்படி தேவன் கிரியை செய்ய விரும்புகிறார் என்பது, தேவனின் தனிப்பட்ட உரிமை. இதுவே செயல்படும் கிருபையாகும். கிரியைகளிலேயும் (செயல்பாடுகளில்) வித்தியாசங்கள் உண்டு. ஆனால், எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே (1 கொரி. 12:6). தேவனுடைய சத்தத்தைக் கேட்பதும் அவருக்குக் கீழ்படிவதும் நம்முடைய பொறுப்பாகும். நம்மிடத்தில் பேச அவர் உபயோகிக்கும் முறை, தேவனின் தனிப்பட்ட உரிமையாகும். நம்மிடத்தில் அவர் எப்படி பேச வேண்டும் என்று நாம் தேவனுக்கு சொல்ல முடியாது. என்ன முறை பிடிக்குமோ அதை தேர்ந்தெடுப்பது தேவனின் உரிமையாகும். தேவன் தம்முடைய பாத்திரங்களிடத்தில் பேசுவதற்கு ஒரு குறிப்பிட்ட முறையை தெரிந்தெடுக் கும்போது, செயல்படும் கிருபையின் வித்தியாசமான பகுதிகளில் கிரியை செய்வார்.

சிலநேரங்களில் தேவன் தம்முடைய பாத்திரங்களிடத்தில், தரிசனங்கள் மற்றும் வெளிப் பாடுகள் மூலம் பேச தெரிந்துகொள்கிறார். தேவனுடைய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் அநேகர், தரிசனம் காண்பதில் பழக்கப்பட்டிருந்தனர். ஆயினும், நெகேமியாவுடன் கிரியை செய்த முறையில், ஒரே ஒரு தரிசனம் கூட பதிவு செய்யப்படவில்லை. ஆனாலும், நெகேமியா தேவனுடைய பரிபூரண சித்தத்தில் இருந்து எருசலேமின் அலங்கங்களைக் கட்டினான். தாவீது இராஜாவும் கூட தரிசனங்களைப் பெற்றுக் கொண்டதாக நாம் கேள்விப்படவில்லை. ஆனாலும் அவர் தமது பாடல்களில், கர்த்தர் தமக்கு முன்பு இருப்பதாக காண்கிறார் என்று அவரைப் பற்றி நாம் விசுவாசிக்கிறோம் (சங். 16:8). தாவீதின் வாழ்க்கையில் தேவன் செயல்பட்டவிதம், சாமுவேல் தீர்க்கதரிசியின் வாழ்க்கையில் செயல்பட்ட விதத்தைக் காட்டிலும் வித்தியாசமானது. தாவீது ஒரு தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டார் (அப். 2:30).

ஒன்றுபோல செயல்பட்ட இரண்டு தீர்க்கதரிசிகள் இல்லை. பவுலும் பர்னபாவும் அப்போஸ்தலத் துவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் ஊழியம் செய்த விதம் வித்தி யாசப்பட்டிருந்தது (அப். 13:2). பவுல் முன்னணியிலிருந்து போதிப்பதில் கைத்தேர்ந்தவராகக் காணப்பட்டார். ஆனால், பர்னபாவோ பின்னணியிலிருந்து பின் தொடர் வேலையைச் செய்பவராகக் காணப்பட்டார். ஒவ்வொரு தேவ மனிதருக்குள்ளும் மனுஷிக்குள்ளும், அவர்கள் மூலம் செயல்படும், தேவனுடைய செயல்படும் கிருபை வித்தியாசமானது. அபிஷேகம் ஒருவரிடத்திலிருந்து ஒருவருக்கு கடந்து வரும்போது, சில நேரங்களில் எலியா எலிசாவைப் போல சில ஒற்றுமைகள் இருக்கலாம். ஆயினும் ஒவ்வொரு தேவ ஊழியனும், தன்னுடைய வாழ்வில் தேவன் செயல்படும் விதத்தைத் தீர்மானிக்க காத்திருக்க வேண்டும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

நம்முடைய வாழ்வில் தேவனுடைய செயல்படும் கிருபையைத் தீர்மானித்தபின், தேவன் முன்குறித்தபடியே, நம்முடைய ஊழியத்தின் பல நிலைகளுக்கேற்றபடி, செயல்படும் கிருபையும் வித்தியாசப்பட்டு மாறும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாழ்க்கைக்கும் தேவன் வடிவமைத்திருக்கிற பல்வேறு நிலைகளின் நோக்கத்தைக் குறித்து 'The Anointing of the Holy Spirit' என்ற புத்தகத்தில் இன்னும் அதிகமாக விவாதிக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்வு மற்றும் ஊழியங்களின் ஒவ்வொரு நிலையிலும், ஊழிய கிருபை மற்றும் செயல்படும் கிருபையின் அதிகமான நிலையில், வித்தியாசமாக தேவன் கிரியை செய்து செயல்படுவார்.

சுவிசேஷகனாகிய பிலிப்பு, தன்னுடைய ஊழியத்தை மூப்பராக ஆரம்பித்தார் (அப். 6:5). அவர் மூப்பராய் நியமிக்கப்பட்டபின், அவருடைய வாழ்வில் ஊழிய கிருபையும், செயல்படும் கிருபையும் அதிகமான அளவில் வெளிப்படுத்தப்பட்டது. ஸ்தேவானுடைய வாழ்விலும் இதே காரியம் உண்மையாயிருந்தது (அப். 6:8). கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டபோது, பிலிப்பு சமாரியாவிற்கு போனான் (அப். 8:1, 4, 5). சமாரியாவில்தான், பிலிப்புவின் ஊழியம் வேறொரு புதிய நிலைக்கு சென்றது. அற்புதங்களைச் செய்வதின் மூலம், தேவன் அவர் வாழ்க்கையில் அதிகமாய் செயல்பட்டார் (அப். 8:6). ஒரு தூதனிடமிருந்து அவன் செய்ய வேண்டியவைகளை குறித்த செய்திகளைப் பெற்றுக்கொண்டு, ஒரு வித்தியாசமான இடத்திற்கு கொண்டு செல்லப்படும் அனுபவத்தை பெற்றான் (அப். 8:26, 39). அந்த நேரத்திலிருந்து, அவன் தன் கடைசி நிலையை அடையும் வரை, அதாவது செசரியாவில் குடியேறும்வரை, அநேக பட்டணங்களில் பிரசங்கித்துக்கொண்டு வந்தான் (அப். 8:40; 21:8).

பவுல் தன்னுடைய ஊழியத்தை வித்தியாசமாக ஆரம்பித்தார். அவர் 'கிறிஸ்தவ துர் உபதேசக்காரர்களை' சிறைப்பிடித்தபோது, தான் தேவனை சேவிக்கிறேன் என்று உண்மையாகவே நினைத்துக்கொண்டிருந்தார் (அப். 22:3). அவர் உண்மையுள்ளவராக இருந்தாலும், அவர் அறியாதவராகவும் தவறு செய்கிறவராகவும் இருந்தார் (1 தீமோ. 1:13). அவர் சத்தியத்திற்குள் வந்தபோது, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். தமஸ்குவிலும், எருசலேமிலும் அவர் புறக்கணிக்கப்படுதலை அனுபவித்தார் (அப். 9:22, 23, 29). அவர் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பிக்க அது நேரமல்ல.

அவர் தன் சொந்த ஊரான தர்சு பட்டணத்திற்குத் திரும்பிப் போய், அமைதியான பத்து வருடங்களை செலவிட்டார் (அப். 9:30). அவர் முகமறியாதவராக இருந்தார். மற்றும் அவருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியம் இல்லை (கலா. 1:22). அது ஆயத்தத்தின் நேரமாய் இருந்தது. கடைசியாக நீண்ட காத்திருத்தலுக்குப் பின்பு, ஊழியஞ்செய்வதற்கு அந்தியோகியாவில் திறந்தவாசல் இருக்கிறது என்கிற செய்தியை, பர்னபா பவுலுக்கு கொண்டுவந்தான் (அப். 11:25, 26). அந்த நேரத்தில் பவுல் தன்னுடைய ஊழியத்தின் முதல் பகுதிக்குள் நுழைந்தார். அவருடைய வாழ்வில் ஊழிய கிருபையும், செயல்படும் கிருபையும் அந்த நேரத்தில் போதிக்கும் ஊழியத்தில் மட்டும் இருந்தது.

ஒன்றிலிருந்து இரண்டு வருடங்கள் அந்தியோகியா சபையிலிருந்த பிறகு, ஒரு ஜெபக் கூட்டத்தில், ஊழியத்தின் இரண்டாம் நிலைக்குள் பவுல் நுழைந்தார் (அப். 13:1–3). அதிக அளவிளான ஊழிய கிருபை அவருடைய வாழ்வில் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவருடைய வாழ்வில் இருந்த செயல்படும் கிருபையும் வித்தியாசமாக காணப்பட்டது. சீப்புரு தீவிலே எலிமா என்ற மாயவித்தைக்காரனுக்கு விரோதமாய் அவர் ஒரு அடையாளத்தை செயல்படுத்தினார் (அப். 13:8–12). இந்த பகுதியில் அல்லது நிலையில் தேவன் அநேக அற்புதங்களையும், அதிசயங்களையும், அடையாளங்களையும் அவருடைய ஊழியத்தில் செய்தார் (அப். 15:12).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

அவருடைய மூன்றாம் பகுதி அல்லது நிலையில், அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக, எருசலேம் சபையார் அவருக்கு வலதுகை கொடுத்தனர். தேவன் அவருக்கு அதிகமான தயவையும் கிருபையையும் அளித்தார். அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களை, அவர் ஸ்தாபித்த எல்லா சபைகளுக்கும் கொண்டு சென்று அவைகளை பலப்படுத்தினார் (அப். 16:4). இந்த நிலையில் மக்கெதோனியா அழைப்பு மூலம், தேவன் புறஜாதிகளுக்கு ஒரு புதிய வாசலைத் திறந்தார் (அப். 16:9, 10). மூன்றாவது நிலையின் ஆரம்பத்தில், அவர் தன்னுடைய கூட்டாளியும் நெருங்கிய நண்பனுமான பர்னபாவை விட்டும் பிரிந்தார் (அப். 15:39–41). தன்னுடைய மூன்றாவது பகுதியில், பவுல் புறஜாதி உலகத்தின் பெரிய பகுதிகளை சந்தித்தார். பிலிப்பி, தெசலோனிக்கா, அத்தேனே மற்றும் கொரிந்துவிற்கு அவர் சுவிசேஷத்தை கொண்டு சென்றார்.

அவருடைய நான்காம் நிலையில், திறன்னு என்பவருடைய வித்தியாசாலையிலே பவுல் போதிக்கும் ஒரு நிலையத்தை நிறுவினார் (அப். 19:9, 10). பவுலுடைய பிரசங்கத்தையும் கீழ்ப்படிதலையும், பெரிய அளவிலான ஊழிய கிருபையினாலும் செயல்படும் கிருபையினாலும் தேவன் உறுதிப்படுத்தினார். தேவன் பவுலின் கைகளினால், விசேஷித்த அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார் (அப். 19:11). சரியாக மூன்று வருட காலங்கள் பவுல் எபேசுவிலே தங்கியிருந்தார் (அப். 20:31). அவருடைய நான்காம் நிலையிலே, அவருடைய ஊழியம் ஆசியா மைனர் முழுவதிலும் பரவிற்று.

பவுலினுடைய ஊழியத்தின் கடைசி மற்றும் ஐந்தாம் நிலை மிகவும் கடினமானது. அவர் அதிகமான காலங்கள் கைதியாக இருந்து, நியாயாசனத்தில் அதிகாரிகள் மற்றும் ஆளுகிற வர்களுக்கு முன்பாக நிற்க வேண்டியிருந்தது (அப். 20:23; 23:11; 24:10; 25:12; 26:1). ஆயினும் இது அவருடைய வாழ்க்கையிலிருந்த தீர்க்கதரிசனத்தின் கடைசி நிறை வேறுதலாயிருந்தது. இராஜாக்களுக்கு முன்பாக அவர் இயேசுவின் நாமத்தை சுமந்து செல்வார் (அப். 9:15). அவருடைய ஐந்தாவது பகுதியில், அநேக தனிமையான காலங்கள் இருந்தன (2 தீமோ. 4:16).

எனினும், பவுலின் வாழ்க்கையில் இது மிக முக்கியமான பகுதியாயிருந்தது. இந்தப் பகுதியில்தான், பவுல் அவருடைய நிருபங்களில் அதிகமானவற்றை எழுதினார். பவுல் தன்னுடைய எழுத்துக்களின் மூலம், காலத்தை கடந்து சென்று எண்ணற்ற கிறிஸ்தவர்கள் மற்றும் பரிசுத்தவான்களின் வாழ்வை மாற்றி மறுரூபப்படுத்தினார். பவுலுடைய ஊழியத்தின் ஐந்தாம் நிலையின் தாக்கத்தையும் விரிவாக்கத்தையும், நாம் பரலோகத்தில் மாத்திரமே காண முடியும். அவருடைய ஐந்தாவது பகுதி மிகவும் தனிமையானதாக இருந்தாலும், அது அதிகமான மக்களை சென்றடைந்தது.

நம்முடைய வாழ்வில் ஊழிய கிருபைகளும், தேவனுடைய செயல்படும் கிருபையும் பகிர்ந்தளிக்கப்படும்போது, நாம் உணர்வுள்ளவர்களாய் இருப்பது அவசியம். நம்முடைய வாழ்வைக் குறித்த அவரின் தனிப்பட்ட திட்டத்திற்கு நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கேற்றவாறு, தேவன் நமக்கு பதிலளிக்கிறார். நம்மடைய வாழ்வை மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்த்து அவர் பலனளிப்பதில்லை. மாறாக, நம்முடைய வாழ்வைக் குறித்து அவர் வைத்திருக்கும் எழுதப்பட்ட திட்டத்தையும், நம்முடைய வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்தே பலனளிக்கிறார். உங்களுடைய வாழ்விற்கான அவருடைய சித்தத்திற்கு உண்மையுள்ளவர் களாக இருங்கள்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*அத்தியாயம் 4*

# தேவ ஊழியங்களிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

தங்களைச் சுற்றியுள்ள ஸ்தாபிக்கப்பட்ட ஊழியங்களிலிருந்து கற்றுக்கொள்ளாமல், ஒருவரும் தங்கள் வாழ்வில் தேவனுடைய ஊழியத்தின் முழு அளவிற்கு வரமுடியாது. ஒவ்வொரு காலத்திலும், தேவன் தம்முடைய சபையில் எப்பொழுதும் ஐந்துவகை ஊழியங்களை, அவைகள் அந்தப் பெயரின் அடிப்படையில் அழைக்கப்படாவிட்டாலும், வைத்திருந்தார். ஐந்துவகை ஊழியங்கள் மூலம் சபை பூரணப்படுத்தப்படுவது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது (எபே. 4:11—14). அடுத்த தலைமுறைக்கான ஐந்துவகை ஊழியங்கள், முந்தின தலைமுறையிலிருந்து கற்றுக் கொண்டு, கிறிஸ்துவின் முழு சரீரமும் தகுதிப் படுத்தப்பட தொடர்ந்து கிரியை செய்கின்றனர்.

மற்ற ஊழியங்களிலிருந்து கற்றுக்கொள்ளும்போது, நாம் சில கொள்கைகளையும் வழி காட்டுதல்களையும் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. வழிகாட்டும் நெறிமுறைகள் இல்லாவிட்டால், முந்தின தலைமுறையினரின் உபதேசத்திலும், செயல்முறைகளிலுமுள்ள தவறுகளையும் நாம் பின்பற்றிவிடுவோம். முந்தின தலைமுறைக்கு தேவன் வெளிப்படுத்தின வெளிப்பாடுகளையும் அபிஷேகத்தையும் நாம் சுற்றிவளைத்துக் கொண்டு, இன்னும் அதிகமான அபிஷேகத்திற்குள்ளும் பெரிய வெளிப்பாடுகளுக்குள்ளும் கடந்து செல்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இதைச் செய்ய தவறுவது, முந்தின தலைமுறையினர் அனுபவித்ததை புதிய தலைமுறையினருக்கு மறுபயிற்சி கொடுக்கும் திட்டத்தை போலாகும்.

### *கொள்கைகளிலிருந்து ஆள்தத்துவங்களை வித்தியாசப்படுத்துதல்*

ஒவ்வொரு தேவ மனிதருக்கும் அவர்களுடைய ஆள்தத்துவத்தில், வினோத நடத்தை பழக்கம் இருக்கிறது. தேவ மனிதர்களின் ஆள்தத்துவத்தில் உள்ள வினோதமான குணங்களுக்கும், அவர் கடைப்பிடிக்கிற கொள்கைகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை காணமுடியாததே, அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு உள்ள பிரச்சனையாகும். ஒட்டுமொத்த மாக அவருடைய ஊழியத்தை நகல் எடுப்பதுபோன்று பின்பற்றுவது, அவர் செய்த தவறுகளை மறுமடியும் செய்வது போலாகும். இப்படி நடைபெறுவதை தேவன் தடுப்பாராக. ஒரு ஊழியத்திலிருந்து உபயோகமானவற்றைக் கொண்டுவர, மிக முக்கியமான குறிப்புகள் என்னவென்றால், அந்த தேவ மனிதன் வெளியே கொண்டுவந்த கொள்கைகளே ஆகும்.

எல்லா வழிமுறைகளும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டன. முந்தின தலைமுறையின் வழிமுறையை குருட்டுத்தனமாக பின்பற்றுபவர்கள், அந்த வழிமுறைக்கு பின்னால் உள்ள வெளிப்பாட்டை இழந்துவிடுவர். அதே வெளிப்பாடு இல்லாமல், அவர்களுக்கு கையளிக்கப்பட்ட வழிமுறைகளை விருத்தியடையச் செய்யும் நிலை அவர்களுக்கு இருக்காது. நிலைநிறுத்தப்பட்ட திருச்சபை கிறிஸ்தவத்தினுடைய மகா பெரிய சபைப்பிரிவுகளின் மனப்பான்மைகள், இதற்கு சான்றுகளாயுள்ளன. முந்தின தலைமுறையின் வெளிப்பாடு இல்லாமல், முட்டாள்தனமான அர்த்தமற்ற சபைக்கொள்கைகளை புதிய தலைமுறையினர் எடுத்துக்கொள்ளும்போது, சபை பிரிவுகள் உருவாகின்றன. இது நடைபெறும்போது, எந்த ஒரு பெரிய தேவனுடைய அசைவாடுதலும், ஒரு புதிய சபைப்பிரிவாக உருவாக முடியும்.

ஊழியத்தில் வெற்றி கண்ட ஒரு ஊழியரிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்பும் கிறிஸ்தவர் கள், அந்த தேவ மனிதர் உபயோகித்த வழிமுறைகளுக்கு பின்னால் உள்ள கொள்கை களைக் கண்டுபிடிக்க வேண்டும். வழிமுறைகள் மாறலாம். ஆனால், கடைப்பிடிக்கப்படும் கொள்கைகள் மாறுவதில்லை. ஒரு ஊழியரின் வினோதமான குணாதிசயத்தால் உருவாகும் வழிமுறைகளை கிறிஸ்தவர்கள் தள்ளிவிட வேண்டும். எந்த ஒரு தேவ ஊழியருக்கும் எதிராக, எதிர்மறையான மனநிலை கொள்ளாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானவற்றைப் பற்றிக்கொள்ளுங்கள் (1 தெச. 5:21).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*அபிப்பிராயங்களிலிருந்து வெளிப்பாடுகளை வேறுபடுத்துதல்*

ஐந்துவகை ஊழியத்தில் நிற்கும் ஒரு ஊழியர், கிறிஸ்துவினுடைய சரீரத்திற்கு ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டை கொண்டு வருகிறார். சில நேரங்களில் இந்த வெளிப்பாடு, அந்த தேவ ஊழியரின் அபிப்பிராயங்களோடு கலந்துவிடும். கிறிஸ்துவின் சபைக்கு அந்த தேவமனிதன் கொண்டுவர அழைக்கப்பட்ட வெளிப்பாட்டிற்கும், அந்த தேவமனிதனின் தனிப்பட்ட அபிப்பிராயங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்க கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோமானால், உபதேச தவறுகள் தொடரலாம்.

எல்லா வெளிப்பாடுகளும் மூன்று பரீட்சைகளை ஜெயிக்க வேண்டும்: அது எழுதப்பட்ட தேவ வார்த்தையோடு ஒத்திருக்க வேண்டும், அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும் மற்றும் அது ஊழியரின் வாழ்வில் கனிகளைக் கொண்டுவர வேண்டும். எல்லா உபதேசத்திற்கும் பழக்கத்திற்கும், எழுதப்பட்ட தேவ வார்த்தையே ஒரே அதிகாரமாயிருக்கிறது (2 தீமோ. 3:16). வெளிப்பாடு என்றழைக்கப்படும் எதுவும், கண்கவரும் அல்லது பயமுறுத்தக் கூடிய தரிசனத்தையுடையதானாலும், அது வசன அடிப்படையோடு இருக்க வேண்டும். எல்லா வெளிப்பாடுகளின் நோக்கமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உயர்த்துவதே (யோவா. 16:13, 14). எல்லா உண்மையான வெளிப்பாடு களும், தேவ ஊழியரின் வாழ்வில் பரிசுத்தம், அன்பு, நீதியாகிய கனிகளைக் கொடுக்கும் (மத். 7:20; 1 யோவா. 3:6–9).

வெற்றியடைந்த எந்த ஒரு ஊழியரின் போதனையைக் கேட்கும் ஒவ்வொரு சமயமும், அப்படியே எல்லாவற்றையும் விழுங்காதீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளாதீர்கள். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை வைத்து, எல்லா போதனைகளையும் நியாயந்தீருங்கள். இது ஒரு ஊழியரை நாம் புறக்கணிப்பது ஆகாது. ஆனால் மாறாக, நம்முடைய வாழ்வில் தேவனுடைய வசனத்தை முதலில் வைத்து, இயேசு சொன்னதை நாம் பின்பற்றுகிறோம் (லூக். 21:33).

எந்த தேவ மனிதனாவது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் பரீட்சைக்கு தன்னை உட்படுத்திக்கொள்ள மறுத்தால், அவருடைய போதனைகள் கேட்பதற்கு தகுதியானவைகள் அல்ல. அவர் தனக்குத்தானே சட்டமாகவும், துர்பக்தி மனப்பான்மையுடனும் இருக்கிறார். அவர் தடுக்கப்படாவிட்டால், பின்பற்றுவதற்கு எழுதப்பட்ட தேவவார்த்தை அவருக்கு இல்லாததால், அவர் தீவிரமான தவறான பழக்கங்களுக்குள் சென்றுவிடுவார். தேவனிடத் திலிருந்து உண்மையான தரிசனத்தைப் பெற்ற எல்லா தேவமனிதர்களும், எழுதப்பட்ட வேதவசன பரீட்சைக்கு தங்களை உட்படுத்திக்கொள்ளும் அளவிற்கு தாழ்மையுள்ளவர் களாய் இருப்பர். எந்த மனிதனும், எந்த ஊழியமும், எந்த தரிசனமும், எந்த வெளிப்பாடும், எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு மேலாக இருக்கவே முடியாது.

*சால்வைகள் மாற்றிக்கொடுக்கப்படுதல்*

எல்லா வெளிப்பாடுகளையும் சத்தியங்களையும் நாமே கண்டுபிடிக்க வேண்டியதாயிருந் தால், தேவனால் பயன்படுத்தப்பட நாம் தயாராகும் நேரத்தில், நாம் நரைமுடியோடு வயது முதிர்ந்த வர்களாகிவிடுவோம். தேவ மனிதர்கள் கண்டுபிடித்த, சில கொள்கைகளும் வெளிப்பாடுகளும் பூரணப்படவும் விளங்கிக்கொள்ளவும், எண்ணுக்கடங்காத வருடங்களாயின. அவர் களுடைய ஊழியங்களுக்கு நாம் திறந்தவர்களாய் இருப்போமானால், நாம் அவர்களிடம் இருந்து அவைகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். மற்றும், மிகவும் குறுகிய நேரத்தில் அதே பகுதி களில் செயல்பட ஆரம்பிக்கவும் முடியும். கற்றுக்கொள்ளும் மனப்பான்மையைப் பெற்றிருப்பதும், கிடைக்கக்கூடிய எல்லா ஊழியர்களிடமிருந்தும் கற்றுக்கொள்வதுமே இதனுடைய நோக்கமாகும்.

தன்னுடைய ஊழியத்தை ஆரம்பிக்கும் நேரம் வரும்வரையிலும், யோசுவா அநேக வருடங்கள் மோசேயின் செட்டைகளுக்கு கீழே அமர்ந்திருந்தான். தான் மரிக்குமுன், மோசே அவன் மேல் தன் கைகளை வைத்து, ஞானத்தின் ஆவியை பகிர்ந்தளித்தான் (உபா. 34:9).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அந்த நேரத்திலிருந்து மோசேயைப் போல் அவன் அற்புதங்களின் மண்டலத்திற்குள் நுழைந்தான். மோசேயிக்கு செங்கடல் பிளந்ததுபோல, யோசுவாவிற்கு யோர்தான் நதி பிரிந்தது. அவன் சூரியனை நிறுத்தி, தேவனுடைய ஜனங்களுக்கு மிகபெரிய வெற்றியைப் பெற்றுத் தந்தான்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரத்தின் ஊழியத்தில் கீழ் ஒருவர் அமர்ந்திருக்கும் போது, அபிஷேகம் மாற்றிக்கொள்ளப்படுவது அதிக செயலூக்கம் உள்ளதாக இருக்கும். இரட்டிப்பான அபிஷேகத்தைக் கேட்கத் துணியும் முன், தீர்க்கதரிசி எலியாவுடன் எலிசா பத்துவருடம் மிக நெருக்கமாக இருந்தார் (2 இராஜா. 2:9). அவருடைய ஊழியம், எலியாவின் ஊழியத்தைப்போல் இரண்டு மடங்கு வல்லமையுள்ளதாக இருந்தது.

அப்போஸ்தலர்கள் ஏழு மூப்பர்கள் மேல் கைகளை வைத்தபோது, அப்போஸ்தலர்கள் மேலிருந்த அபிஷேகத்தின் பகிர்ந்தளிப்பை, அவர்களும் பெற்றுக்கொண்டனர். கைகள் வைக்கப்பட்டப் பின்னரே, அவர்களில் இருவர் அப்போஸ்தலர்களைப்போலவே, அற்புதங் களையும் அடையாளங்களையும் செய்ததாக நாம் வாசிக்கிறோம் (அப். 5:12; 6:6, 8; 8:6). அபிஷேகம் மாற்றிக் கொடுக்கப்படக் கூடியது. முந்தின தலைமுறைகளின் அபிஷேகங்களும் சால்வைகளும், அவர்கள் கடந்து சென்ற பின்னர் முடிவடையும்படியாக கொடுக்கப்பட்டதல்ல. புதிய தலைமுறையினால் அது தொடரப்படவும் மதிப்பூட்டப்படவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், இந்தப் பகுதியைப் பற்றிய போதனைகள் குறைவாக இருப்பதால், அபிஷேகங்களும் சால்வைகளும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வெளிப்படுத்தப்பட்ட பின்பு நின்று விடுகின்றன.

பெற்றுக்கொள்ளப்படும் அபிஷேகத்தின் படிகளும் வகைகளும், நான்கு காரணிகளைச் சார்ந்திருக்கின்றன: நாம் யாருக்கு கீழ் அமர்ந்திருக்கிறோமோ அந்த ஊழியரின் ஆவிக்குரிய ஸ்தானம், அந்த ஊழியருடன் சேர்ந்திருக்கும் நெருக்கம், பெற்றுக்கொள்பவரின் தாகத்தின் நிலை, நம்முடைய வாழ்வில் உள்ள தேவனுடைய அழைப்பு. இது அதிக விளக்கத்தோடு ‘The Anointing of the Holy Spirit’ ‘பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்’ என்ற புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. வெவ்வேறு ஊழியர்கள் வெவ்வேறு அபிஷேகத்தைக் கொண்டுவருகின்றனர். சிலர் ஒன்றுக்கும் அதிகமான ஆவிக்குரிய ஸ்தானத்தில் இருக்கின்றனர்.

இந்த இடத்தில் நாம் வலியுறுத்த விரும்பும் உண்மை என்னவெனில், நாம் ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்காவிட்டால், எவ்வளவு அதிகமாய் கைளை வைத்தாலும், அந்த அழைப்பை நம்மேல் வைக்க முடியாது. எனினும், ஊழியரைப் போன்ற அதே ஸ்தானத்திற்கு நாம் அழைக்கப்பட்டிருந்தால் (எலியாவும், எலிசாவும் ஒரே ஸ்தானத்திற்கு அழைக்கப்பட்டதுபோல) மாற்றிக்கொடுப்பதன் மூலம் நம்முடைய வாழ்வின் மேல் கடந்து வரும் அபிஷேகம், நம்முடைய ஊழியத்தைப் பலமடங்கு அதிகரிக்கச் செய்யும். அந்த ஊழியர் செயல்படுத்தின கொள்கைகளை நாம் முற்றிலும் விளங்கிக்கொண்டால், இன்னும் அதிகமான பெருக்கம் உண்டாகும்.

இருந்தபோதிலும், ஒரு ஊழியர் இருக்கும் அதே ஸ்தானத்தில் நாம் இராவிட்டாலும், அபிஷேகம் மாற்றிக்கொடுக்கப்படுவதின் மூலம், நம்முடைய அபிஷேகத்தை ஒரு குறிப்பிட்ட அளவு செயலூக்கம் செய்துகொள்ள முடியும். உதாரணமாக, நாம் மேய்ப்பர்களாய் மாத்திரம் அழைக்கப்பட்டிருக்கும் நிலையில், ஒரு சுவிசேஷகர் நம்முடைய வாழ்வில் அபிஷேகத்தைப் பகிர்ந்தளிப்பாரானால், நம்முடைய வாழ்வில் உள்ள சுகமாக்கும் அபிஷேகம் அதிகமாகும். மாற்றிக்கொடுப்பது, தேவன் நம்மை அழைக்காத ஸ்தானத்தில் நம்மை வைக்க முடியாது. ஆனால் அது நாம் செயல்படும், விசுவாசிகளின் ஒன்பது வகை ஊழியங்களிலும், பரிசுத்த ஆவியானவரின் வரங்களிலும், ஏதாவது ஒன்றை செயலூக்கம் அடையச்செய்யும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*